Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா
ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்
இணுவில் (சி-1428) T.P.-2223565

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 27 (25.09.2003) வியாழக்கிழமை இதழ்: 355


பொங்கு தமிழ் நிகழ்வில் ஈகச்சுடர் ஏற்றப்படுகிறது.


கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினர்.


தலைவரின் படங்களுடன் மாணவர்கள்.

# 50 ஆயிரம் மக்கள் திரண்டெழுந்த வவுனியா 'பொங்கு தமிழ்' நிகழ்வு!

(வவுனியா)

**வவுனியாவில் நேற்று எழுச்சிபூர்வமாக நடைபெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்வில் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தமது உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.**

நேற்று வவுனியாவிலுள்ள ஐந்து வீதிகளிலிருந்தும் மாலை 3.30 மணிக்கு பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி ஆரம்பமானது. ஹொரவப் பொத்தானை வீதியிலிருந்து வந்த பேரணி, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜ குகனேஸ்வரன் தலைமையிலும் கண்டி வீதியிலிருந்து வந்த பேரணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலும், மன்னார் வீதி வழியாக வந்த பேரணி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையிலும், யாழ். வீதி வழியே வந்த பேரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவிராஜ், மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையிலும், பூந்தோட்டம் வீதி வழிவந்த பேரணி நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தலைமையிலும் நடந்தன.

ஐந்து வீதி வழியாகவும் வந்த பேரணிகளில் கலந்து கொண்டோர் தலைவர் பிரபாகரனது படங்களைத் தாங்கியவாறு வந்தனர். இந்தப் பேர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபனின் இறுதிநாள் நிகழ்வில் புலிக்கொடி ஏற்ற பொலிஸார் தடை!

தியாகி திலீபனின் இறுதிநாள் நினைவுதினத்தில் - நெடுந்தீவில் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றக்கூடாது என்று, நெடுந்தீவுப் பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

அரச திணைக்களங்கள், பாடசாலைகள், பொதுஅமைப்புகள் ஆகிய இடங்களுக்கு நேற்றுச் சென்ற பொலிஸார், நிறுவன தலைவர்களிடம் இது தொடர்பாக பேசியதாகவும் கூறப்படுகிறது.

தமக்கு தலைமைப்பீடத்திலிருந்து அறிவுறுத்தல் வந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், அறிவுறுத்தல் அடங்கிய பிரதியினை காட்டினார். அதிலே நிறுவன தலைவர்களிடம் ஒப்பம்பெற்றுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்


வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில ஏறுதோ...!

## அதிகாரமுள்ள இடைக்கால அரசை புலிகளிடம் கையளிக்க வேண்டும்!

### வவுனியா 'பொங்கு தமிழ்' பிரகடனத்தில் வலியுறுத்தல்

(வவுனியா)

நிலம், நிதி, காவல்துறை, நீதி போன்ற அதிகாரங்கள் முறையாக உள்ளடக்கப்பட்ட இடைக்கால அரசை இலங்கை அரசு எங்களது ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் உடனடியாகக் கையளிக்கவேண்டும் என, நேற்று வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வின் போது வெளியிடப்பட்ட பொங்கு தமிழ் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று, வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வின்போது வெளியிடப்பட்ட பொங்கு தமிழ் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டது. காலம் கடந்து போயுள்ளது.

எமது இயல்பு வாழ்க்கை இழுத்தடிக்கப்பட்டு, பேச்சுவார்த்தை இடைநின்று போயிற்று. யுத்தமேகம் எம்மீது திணிக்கப்படுகின்றதான நிலைமை உருவெடுத்துள்ளது.

இந்நிலைமையை தமிழ் பேசும் மக்களாகிய நாம் மாற்ற விரும்புகிறோம்.

அந்த நோக்குடனேயே வவுனியாவின் மூலைமுடுக்குகளில் இருந்தெல்லாம். பொங்கு தமிழர்களாய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் அதிகாரிகள் அம்பாறைக்கு விஜயம்!

பிரிட்டிஷ் அரசின் உயரதிகாரிகள் கொண்ட குழுவினர், நேற்று அம்பாறை மாவட்டத்திற்கு சென்று பலதரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.

கல்முனை கிறிஸ்ரா இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழர் பிரதிநிதிகளும், பள்ளிவாசல் தலைவர்களைச் சேர்ந்த முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், அவர்களது பிரச்சினைகள் தொடர்பாக பிரிட்டிஷ் பிரதிநிதிகள் விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர். அதன்பின், அவர்கள் அம்பாறையின் பல பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

## அதிகாரப்பரவலாக்கலை மீண்டும் அமுல்படுத்த அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி ஆராய்வு!

### அவரது ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கலை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் ஜனாதிபதி ஆராய்ந்துவருவதாக அவரது ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஹரீம் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேசி தீர்வு காணமுடியும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதாகக் கூறி, நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையில் அரசாங்கம் நடந்துவருகிறது. இதனை அரசாங்கத்துக்கு எடுத்துரைக்கவேண்டிய கடமைப்பாடு எமக்கு உண்டு என்று தெரிவித்த ஹரீம் பீரிஸ்,

இதனைப் புரிந்துகொள்ளாத அரசாங்கம், சமாதானப் பேச்சுக்களை குழப்பும் நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுவருவதாகக் குற்றஞ்சாட்டிவருகிறது.

சமாதானத்தைக் குழப்பி, மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்துவதற்காக,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனைட் வெடித்து தாயும், மகளும் பலி!

### வவுனியா- செக்கட்டிப்புலவில் பரிதாபம்

அநாதரவாகக் கிடந்த கிரனைட் ஒன்றை எடுத்து கையாள முற்பட்டபோது, அது வெடித்ததில் - தாயும், மகளும் ஸ்தலத்திலேயே பலியாகினர் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

வவுனியா - செக்கட்டிப்புலவு பகுதியில் நேற்று மாலை இடம்பெற் இந்தச் சம்பவத்தில் - இராசையா மனோன்மணி (வயது 42), அவரது மகளான இராசையா விஜிலா ஆகிய இருவருமே பலியாகினர்.

சிவலிங்கம் அஞ்சலா (வயது 30), அவரது மகனான சிவலிங்கம் துஷ்யந்த்(வயது 07) ஆகிய இருவருமே படுகாயமடைந்து, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு - மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (03)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# வவுனியா பொங்கு தமிழ் நிகழ்விலிருந்து சில காட்சிகள்













## எமது மக்கள் சம அந்தஸ்துடன் வாழ்வதற்கு வழி ஏற்படவேண்டும்!

### மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரேமினி

விடுதலைப் புலிகளாகிய நாம் இன்று சமாதானத்தையே விரும்புகிறோம். எமது மக்கள் சம அந்தஸ்துடன் வாழ வழியேற்படவேண்டும் என்பதே எமது இலக்காகும்.

மட்டக்களப்பு திரௌபதி அம்மன் ஆலய முன்றலில், நேற்றுக் காலை 10 மணிக்கு மு.திருமகள் தலைமையில் நடந்த திலீபன் நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் திரேமினி இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக கல்முனைக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ. ராஜ்குமார் தேசியக் கொடியை ஏற்றினார். கல்முனைக் கோட்ட நிர்வாகப் பொறுப்பாளர் அறிவாளன் பொதுச் சுடரினை ஏற்றினார். திலீபனின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையை அம்பாறை மாவட்ட மகளிர் பொறுப்பாளர் ரதி அணிவித்தார்.

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், திரேமினி தொடர்ந்து உரையாற்றுகையில்,

திலீபன் மெழுகுவர்த்தி போல தன்னை உருக்கி இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தியாகம் செய்தவர். அகிம்சை வழியில் போராடி மண்ணுக்காக உயிர்நீத்த திலீபனின் வரலாற்றை, ஒவ்வொரு தமிழனும் மிகப்பெரும் சாதனையாக நினைவுகூரவேண்டும். திலீபனின் மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும். என்ற வார்த்தைகள் நனவாகவேண்டும். அதற்கு மக்களாகிய நீங்கள் எமது தலைவரின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும்.

கடந்த ஒன்றரை வருடமாக பேச்சு வார்த்தை நடந்தபோதும், தமிழ்மக்களுக்கு என்ன கிடைத்தது. தமிழ்ப் பிரதேசங்கள் என்ன அபிவிருத்தியைக் கண்டன. பட்டதாரிகளுக்கு கூட தொழில்வாய்ப்பு கிடைத்துள்ளதா?

இது இலங்கை அரசு போடும் நாடகமாகவே உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (07)

### விசேட கூட்டம்

அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச ஆசிரியர் தினம் தொடர்பான இறுதி ஏற்பாடுகளை செய்துகொள்வதற்கான விசேட கூட்டம் ஒன்று, இன்று பிற்பகல் 4 மணியளவில் வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் - கோட்ட, வலய மட்ட செயலாளர்கள், தாய்ச்சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு, கேட்கப்பட்டுள்ளது.

லண்டன் தமிழ்ப்பாடசாலைகள் சங்க அனுசரணையோடு

## கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்று வலைப்பந்தாட்டப் போட்டி!

(வண்ணை)

லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் சங்கத்தின் அனுசரணையோடு, தமிழீழ விளையாட்டுத்துறை இணைந்து பாடசாலைகள் விளையாட்டுச் சங்க ஏற்பாட்டில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி - நேற்றுமாலை கொக்குவில் இந்து மைதானத்தில் இடம்பெற்றது.

1 ஆம் இடம் - பருத்தித்துறை உயர்தரப் பெண்கள் பாடசாலை, 2 ஆம் இடம் - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, 3 ஆம் இடம் - உடுவில் மகளிர் கல்லூரி.

முதல் 3 இடங்களைப் பெற்றோருக்கு முறையே - 10000, 7500, 5000 பணமும், வெற்றிக்கேடயமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. முதல் நான்கு இடங்களைப்பெற்ற அணிகளுக்கு - தமிழீழ விளையாட்டுத்துறையினரால் பந்துகளும், ரிசேட்டும் பரிசாக வழங்கப்பட்டன. (111)

## உதைபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள்

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள், இன்று பிற்பகல் 2.30 மணிமுதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம், டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானம், திக்கம் விளையாட்டுக்கழக மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

16 வயதுப் பிரிவில் -

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும், இமையாணன் அ.த.க.பாடசாலையை எதிர்த்து மணற்காடு வித்தியாலயமும், செம்பியன்பற்று வித்தியாலயத்தை எதிர்த்து கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரியும், வல்வெட்டி வித்தியாலயத்தை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியும் மோதவுள்ளன.

18 வயதுப் பிரிவில் -

தொண்டமனாறு வீரகத்தி வித்தியாலயத்தை எதிர்த்து மணற்காடு வித்தியாலயமும், செம்பியன்பற்று வித்தியாலயத்தை எதிர்த்து கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியும், புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து வல்வை சிவகுரு வித்தியாலயமும் மோதவுள்ளன. (116)


யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நடாத்தும்
சமய அறிவுப் போட்டி - 2003

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே 05 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சையை பின்வரும் 10 நிலையங்களில் நடத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

01. யா/வட இந்து மகளிர் கல்லூரி
02. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
03. யா/விக்கினேஸ்வராக் கல்லூரி
04. யா/அத்தியார் இந்துக்கல்லூரி
05. யா/இராமநாதன் கல்லூரி
06. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
07. யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்
08. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
09. யா/இந்து மகளிர் கல்லூரி
10. யா/நயினாதீவு மகா வித்தியாலயம்

மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான மேற்படி போட்டியில் அனைத்து மாணவர்களும், தவறாது பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களை 14.11.2003 ஆம் திகதிவரை பாடசாலை அதிபர்களிடமிருந்தும், யாழ்ப்பாண மாநகர சபை அலுவலகங்களிலிருந்தும் ரூபா.10 ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைத் திகதி - 16.11.2003 முற்பகல் 9.30 மணி

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சிமன்றம்.
(சி-1591)



நிறஞ்சனாஸ் சங்கானை
அஜீத், லைலா நடித்த
தீனா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ULTRA FORCE- 2
(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.
சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன் நடித்த
ராமச்சந்திரா
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1424)



தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்களின்
16-ஆவது நாள் நிகழ்வு

காலம் :- 26.09.2003 வெள்ளிக்கிழமை காலை 8 மணி
இடம் :- அல்வாய் முத்துமாரி அம்மன் முன்றல்

தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வில் அனைத்து திணைக்களங்களும், நிறுவனங்களும், பொது அமைப்புக்களும் கலந்து இந் நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.



வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம்
Confederation Of Vadamaradchi Public Organizations

துரை சத்தியசீலன்
செயலாளர்

சி.கணபதிப்பிள்ளை
தலைவர்

(சி-1592)

# யாழ். இராணுவத் தளபதியின் நடவடிக்கையால் தமிழருக்கு எவ்வித விமோசனமும் கிடைக்காது

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டுக்கான இராணுவத் தளபதியின் நடவடிக்கையினால் - சமாதானத்தை நோக்கிய பயணத்தில், தமிழ்மக்களுக்கு எந்தவிதமான விமோசனமும் கிடைக்கப்போவதில்லை என்று, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டுக்கான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தாதுவிட்டால், இராணுவத் தளபதியை குடாநாட்டில் இருந்து அகற்ற மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும், அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியதையடுத்து - சமாதான நடவடிக்கைகள் குறித்து, யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் பல எதிர்பார்ப்புக்கள் இருந்தபோதிலும், அவை நிறைவேற்றப்படவில்லை என்று, இந்துகலாசார அமைச்சர் தெரிவித்தார்.

யுத்தத்தின் காரணமாக சுமார் 10 வருடங்கள், வடக்கு - கிழக்கு மீனவர்களுக்கு, தங்களது தொழிலை முறையாகச் செய்ய முடியாது போயுள்ளதென்றும் அவர் கூறினார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னரும், உயர்பாதுகாப்பு வலயம் தொடர்ந்து இருப்பதால் மீனவர்கள் தங்கள் தொழில்களை செய்யமுடியாதுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர் விஜயசேகரவினால்

# கடல்வள திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கடல்வள அபிவிருத்தி திருத்தச் சட்டம் ஒன்றினை, நாடாளுமன்றத்தில் நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகர கொண்டுவந்துள்ளார்.

நடைமுறையில் உள்ள சட்டமூலமானது காலத்திற்கு ஒவ்வாதது என்றும், புதிய சட்டமூலம் ஒன்றை அதனால் கொண்டு வரத் தீர்மானித்தாகவும், அமைச்சர் மகிந்த விஜயசேகர குறிப்பிட்டார்.

புதிய சட்டமூலத்தில், 'டைனமற்' மூலம் மீன்பிடிக்கும் நடவடிக்கைகளைத் தடுக்க வசதி செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தச் சட்டத்தையும் மீறி 'டைனமற்' மூலம் மீன் பிடிப்பவர்களை சிறையில் அடைப்பதற்கு இந்தச் சட்டமூலம் வகை செய்கின்றதென்றும், நீரியல் வளத்துறை அமைச்சர் விஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக்கூடிய போதே, அமைச்சர் மகிந்த விஜயசேகர - புதிய சட்ட மூலத்தைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

# 'றொய்கா' மாநாட்டின் மூலம் இலங்கைக்கு மேலும் நிதியுதவி

## அமைச்சர் மிலிந்தவின் முயற்சிக்குப் பலன்

"றொய்கா" மாநாட்டின் மூலமாக இலங்கைக்கு மேலும் பல நிதியுதவிகள் கிடைக்கவுள்ளன. இந்த மாநாட்டில், இலங்கை முதற் தடவையாகக் கலந்துகொள்ளவுள்ளது. அமைச்சர் மிலிந்தமொறகொடவின் முயற்சியின் பலனாகவே, இலங்கைக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"றொய்கா" மாநாட்டில் - அபிவிருத்தி அடைந்துவரும் சிறிய நாடுகள் பங்குபற்ற அனுமதிக்கப்படுவதில்லை. ஆனாலும், ரோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டின் மூலமாகவே இலங்கைக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இம் மாநாட்டில் கலந்து கொள்வதின் ஊடாக - ஐரோப்பிய யூனியன, ஐரோப்பிய கவுன்சில் மற்றும் ஐரோப்பிய கமிஷன் என்பவற்றுடன் இலங்கை நல்லுறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டின் மூலம் கிடைக்கும் நிதியுதவி - யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள, வடக்கு - கிழக்கு பகுதிகளின் அபிவிருத்திக்கு, நோர்வே மூலமாகப் பயன்படுத்தப்படும் எனவும், அரசு தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



அமைச்சர் மகிந்த விஜயசேகரவுக்கு எதிராக, நேற்றுமுன்தினம் நாடாளுமன்றுக்கு வெளியில் அகில இலங்கை மீனவர் ஒன்றியத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

### சுகாதார, வைத்தியத்துறை ஊழியர்களின்

# செப்ரெம்பர் மாத கொடுப்பனவை முன்கூட்டியே வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

சுகாதார வைத்தியத்துறை ஊழியர்களின் செப்ரெம்பர் மாத கொடுப்பனவை, முன்கூட்டியே வழங்கும்படி சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

நாடு முழுவதிலுமுள்ள சகல வைத்தியத்துறை பிரிவுகளுக்கும், இது தொடர்பான சுற்றுநிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுகாதார சேவை ஊழியர்களை, உடனடியாகக் கடமைக்குத் திரும்பும்படி அரசு உத்தரவிட்டிருந்தது. இதனை கருத்திற்கொண்டு சில ஊழியர்கள் பணிக்கு திரும்பியும் இருந்தனர். இவ்வாறு பணிக்குத் திரும்பிய ஊழியர்களின் இந்த மாத சம்பளக் கொடுப்பனவுகளையே, முன்கூட்டி வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக - சம்பளம் வழங்குவது தொடர்பாக பல முரண்பாடுகள் நிலவுகிறது. இந்த மாதத்திற்குரிய சம்பளத திட்டம் தயாரிக்கப்படாவிட்டால், கடந்த மாத சம்பளத் திட்டப்படி - கொடுப்பனவுகளை வழங்கும்படியும் அரசு அறிவித்துள்ளது.

அதேவேளை - வட பகுதியில் அநேக ஊழியர்கள் பணியில் ஈடுபடுவதாகவும், ஏனைய மாவட்டங்களிலும் பணியாளர்கள் பணிக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவும், சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் படியான புதிய திட்டம் ஒன்று திறைசேரியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்தும் ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது நியாயமற்றது எனவும், சுகாதார அமைச்சர் என்.பி.தயாரத்ன தெரிவித்தார்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் தொழிற்சங்க கூட்டமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் பேசியே, இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்பாக, திறைசேரியே முடிவெடுக்க வேண்டும்.

சுகாதார சேவை ஊழியர்களின் போராட்டத்தின் பின்னால், ஜே.வி.பியினரே உள்ளனர். அவர்களது வழிப்படுத்தலைக் கேட்டு, சுகாதார சேவை ஊழியர்கள் தவறான வழியிலே சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால், நாட்டிலுள்ள பல வைத்தியசாலைகளில் நோயாளர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். எனவே, அரசியல் பின்னணி கொண்ட வேலை நிறுத்தத்தை கைவிட்டு, ஊழியர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்ப வேண்டும் எனவும், அவர் கேட்டுக் கொண்டார்.

# வட-கிழக்கு மீனவரின் அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி!

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள கடற்கரையோரங்களை அபிவிருத்தி செய்வதற்கும், அந்தப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் நலன்களை கவனிக்கவுமென, ஆசிய அபிவிருத்தி வங்கி - 2700 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன், வடக்கு- கிழக்கு கரையோர பாதுகாப்புச் சபை - இந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி - உள்ளூரில் மீன்பிடித் துறைமுகங்களை அமைத்தல், மீனவர்களுக்கான தொழில் உபகரணங்களை வழங்குதல், அவர்களுக்கான பயிற்சிகள், நவீன தொழில்நுட்பங்கள் போன்றவற்றை வழங்குதல், புதிதாக மீனவர்களைக் குடியேற்றுதல் என்பன வாகும்.

எதிர்காலத்தில் மீனவர்களுக்கான ஒரு சுபீட்ச நிலையை ஏற்படுததுவதே இதன் நோக்கமாகும்.(04)

# வேலைவாய்ப்பு முகவரின் வீட்டில் எழுபது பெண்கள் மீது சித்திரவதை

## தப்பி வந்தவர் கண்ணீர்த் தகவல்

(கொழும்பு)

சவூதியிலுள்ள - வேலைவாய்ப்பு முகவர் ஒருவரின் வீட்டில், எழுபது பணிப்பெண்கள் சித்திரவதைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

இந்தத் தகவலை, அங்கிருந்து தப்பிவந்த பெண்மணி ஒருவரே தெரிவித்தார்.

மோசமான முறையில் - சித்திரவதைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்ட இந்தப் பணிப்பெண் - தற்போது மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் மேலும் தகவல் தெரிவிக்கையில், சவூதி அரேபியா-றியாத் நகரிலுள்ள வீடொன்றில் பணிப்பெண்ணாக பணிபுரிந்து வந்த நான், வீட்டுக்காரரால் கொடுமையான முறையிலே துன்புறுத்தப்பட்டேன். அதனால், அங்கிருந்து தப்பி சவூதியிலுள்ள வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றுக்குச் சென்று எனது நிலையை எடுத்துக் கூறினேன். ஆனால், நான் நினைத்ததற்கு மாறாக அங்கும் எழுபதுக்கும் மேற்பட்ட பெண்கள் கொடிய சித்திரவதைகளுக்கு ஆளாகிக்கொண்டிருக்கின்றனர் என்பது தெரியவந்தது, என்று தெரிவித்தார்.

இந்தப் பணிப்பெண்களை உடனடியாக மீட்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### பிரதமர் - ஜனாதிபதியை கோபி அனான் கூட்டாக சந்திப்பார்!

அடுத்த மாதம் 10 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதிவரை, இலங்கைக்கான விஜயம் ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் கோபி அனான் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது - ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் ஆகியோரை கூட்டாகச் சந்திக்க கோபி அனான் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்ற கூட்டத்தில்- ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை ஐக்கிய நாடுகள் சபையின் செயலர் சந்திக்கத் திட்டமிட்டிருந்ததாகவும், அந்தச் சந்திப்பு - ஜனாதிபதி கூட்டத்திற்குச் செல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நியூயோர்க்கில் பஹ்ரேன் நாட்டு பிரதி பிரதம மந்திரியும், வெளிநாட்டு அமைச்சருமான ஷேய்க் மொகமட் பின் மொபராக்கைச் சந்தித்துக் கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

# போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் ஐந்து புலனாய்வு பிரிவினர் கொலை

## மகிந்த விஜயசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் - இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் 5 பேர் கொல்லப்பட்டுள்ளதாக, மகிந்த விஜயசேகர தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றம் கூடிய போது - போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர், எத்தனை புலனாய்வுப் பிரிவினர் கொல்லப்பட்டனர் என்று, ஜே.வி.பியின் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன - நாடாளுமன்றத்தில் சமுகமளிக்காத காரணத்தால், இந்தக் கேள்விக்குரிய பதிலை அமைச்சர் விஜயசேகர அளித்தார்.

கொல்லப்பட்ட புலனாய்வுப் பிரிவினர் ஐந்து பேரில், நான்குபேர் அடையாளம் காணப்பட்டதாகவும், ஒருவர் அடையாளம் காணப்படவில்லையென்றும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை - இராணுவத்தில் சேவையிலுள்ள 11 பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(01)

# புலிகளின் உண்மையான போராட்டத்தினை சர்வதேசம் இப்போது புரிந்துகொண்டுள்ளது

## மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி



முப்பது வருடகாலமாக எத்தனையோ இழப்புக்களை சந்தித்துள்ளோம். ஆனால், இப்போது வட-கிழக்குப் பகுதிகளில் மக்களும், புலிகளும் ஓர் உண்மையான போராட்டத்தை நடத்துகின்றனர் எனச் சர்வதேசம் புரிந்துகொண்டுள்ளது.

இவ்வாறு - மாங்குளம் பிரதேசத்தில் திலீபன் மருத்துவசேவை நிறைவு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

தமிழினி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது -

மக்களினதும், போராளிகளினதும் பலமான அர்ப்பணிப்புக்களாலேயே எம்மை இன்று சர்வதேசம் உற்று நோக்குகின்றது. தற்போது சமாதானத் திற்கு ஒத்துழைப்பு வழங்கும் சர்வ தேச சமூகம், அன்று எமது மக்களை அழித்த இலங்கை அரசிற்கு ஒத்து ழைப்பு வழங்கியது.

அதற்கு எதிராக - மக்களின் கிராமியப் படை, எல்லைப் படை, துணைப்படைகள் அலை அலையாக வந்து போரிட்டதனால், அரசு தோல்வியைக் கண்டது.

நாம் பேச்சுவார்த்தையில் முதலில் கேட்பது - மக்களின் இயல்பு வாழ்க்கையே. நாம் இன்று மேற்கொள்ளும் அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைள் - நாளை அமைக்கும் தேசத தின் அடிப்படை கட்டுமானமாகும். எமது மக்களுக்குக் கிடைக்கும் நிதி - நேரடியாகக் கிடைக்க வேண்டும். யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே, எமது பகுதியில் நிர்வாகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தியுள்ளோம். அதனை நடாத்தத்திட்டம் எம்மிடமுண்டு. நாங்கள் யுத்த வெறியர்கள் அல்ல. நாம் என்றுமே சமாதானத் திற்குத் தயாராக உள்ளோம். தென்னிலங்கையிலுள்ள மக்கள் போன்று, எம்மக்களுக்கும் அடிப்படை வசதிகள் எல்லாம் இருக்கவேண்டும். அதில் ஒன்றுதான் இந்த மருத்துவ சேவை என்றார்.

தமிழீழ அரசியற்துறை துணை பொறுப்பாளர் சோ.தங்கன் உரையாற்றுகையில் கூறியதாவது-

மருத்துவ சேவையானது, எமது தேசிய தலைவரின் நோக்கச் சிந்தனைகளில் ஒன்றாகும். போராளிகள் மக்களுக்கு ஆற்றவேண்டிய இப்பணியினை, திலீபன் மருத்துவ மனையில் மூலமாக நேரடியாக ஆற்றி வருகின்றனர்.

மருத்துவ போராளிகள் ஆற்றும் சேவை மகத்தானது. இந்த மருத்துவ போராளிகள் மக்களுக்கு மட்டுமல்ல, களத்தில் நிற்கும் போராளிகளுக்கும், களத்தில் சென்று சிகிச்சையளிக்கின்றனர் என்றார். (17)





யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினருடனான கலந்துரையாடலில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா உரையாற்றுவதை முதலாவது படத்திலும், கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# யாழ். மாவட்ட ப்யனாளிகளுக்கு 14 இலட்சம் ரூபா கடன் உதவி

(யாழ்ப்பாணம்)

கியுடெக் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ், ஜேர்மன் மிஸ்ரே - ஓர் கத்தோலிக்க நிறுவனம் ஊடாக கடன் அடிப்படையில் யாழ்.மாவட்ட பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள், பெண்கள் ஆகியோருக்கு உதவிகள் வழங்கப்படுகிறது. இதில் 30 விவசாயிகளிற்கும், 80 மீனவர்களிற்கும் 14 இலட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. இக்கடனைப் பெற்றோர் - தமது செயற்பாடுகளை மிகவும் சிறப்பானமுறையில் நடைமுறைப்படுத்தி வருவதாகக் கியுடெக் நிறுவனத்தினர் தெரிவித்தனர். (91)

## மக்கள் குழு நிர்வாகத் தெரிவு

(சுதுமலை)

கியுடெக் நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் பிரிவினால், சண்டிலிப்பாய் பிரதேச மக்கள் குழு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகத் தெரிவில - புதுமடம், சாவக்கட்டு, சுதுமலை, தாவடி ஆகிய இடங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களில் இருந்து, மக்கள் குழுவின் தலைவியாக இ.சைலாவும், செயலாளராக ஜெகனும், பொருளாளராக ஜசிந்தாவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் இக்கிராம மக்களின் நாளாந்த செயற்பாடுகளைச் செய்திட்டங்கள் மூலம் விழிப்படைச் செய்வதுடன், ஏனைய ஊக்குவிப்பு செயற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளனர். (91)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைப்பு

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 120 குடும்பங்களுக்குத் தற்காலிக கொட்டகை அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி கழகத்தின் அனுசரணையுடன், சேவாலங்கா நிறுவனம் தற்காலிக கொட்டகைகள் அமைத்துக் கொடுத்து வருகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட - இத்தாவில் அரசர்கேணி, கச்சாவெளி, பச்சையடி, தர்மகேணி, பேராலை ஆகிய இடங்களில் மீளக்குடியமர்ந்த வறுமை கோட்டின் கீழுள்ள 120 குடும்பங்களுக்கு இத்தற்காலிக கொட்டகைகள் அமைத்து கொடுக்கப்படுகிறது. (17)


வாழ்க வளமுடன்



HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்



பெயர் : த.துளசிதரன்
முகவரி : V.C லேன், கோப்பாய் தெற்கு.

ஐந்தாவது அகவையில்

பெயர் : ச.துஷாயினி
முகவரி : கைதடி மத்தி, கைதடி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்


# விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியளிக்க ஜேர்மன் பயிற்றுவிப்பாளர்கள் வரவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியளிக்க, ஜேர்மனியிலிருந்து ஆறுபேர் கொண்ட பயிற்றுவிப்பாளர்குழு வன்னிவரவுள்ளதாக, தமிழீழ விளையாட்டுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம், காற்பந்து ஆகிய அணிகளிற்கு, வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களிற்கான பயிற்சிகள், கிளிநொச்சியில் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தவருட முற்பகுதியில் இவ்வணிகள் வெளிநாடுகளிற்குச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும், அங்கு தமிழர்கள், வெளிநாட்டவர்கள் பங்கு பெறும் அணிகளுடன் போட்டிகளில் ஈடுபடுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் விளையாட்டுத் துறை தொடர்பான கல்லூரி ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், புலம்பெயர்வாழ் தமிழர் அமைப்புக்கள் அதற்கு நிதி உதவி புரியவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்பந்தாட்ட அணி தெரிவின் போது - யாழ்மாவட்டத்திலிருந்து இரு வீரர்களும், மன்னார் மாவட்டத் திலிருந்து நான்கு வீரர்களும், திரு கோணமலை மாவட்டத்திலிருந்து ஆறு வீரர்களும் தெரிவு செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்காகவே ஜேர்மனியில் இருந்து பயிற்றுவிப்பாளர் குழு வருகைதரவுள்ளது.

## புதிய கட்டட அடிக்கல் நாட்டுவிழா

மன்னார் மாவட்டத்திலுள்ள அரிப்பத் துறை றோ.க.பாடசாலைக்கான புதிய இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராஜகுனேஸ்வரன் இந்த அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த கட்டடத்திற்கு 12 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (201)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளப்பெறுவோர் கவனத்திற்கு

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில், இதுவரை மீளப்பெறாதோர் பின்வரும் அட்டவணைக்கிணங்க தமக்கு வசதியான ஏதாவதொரு இடத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

21.11.2003 (வெள்ளி) - ஸ்ரீசுப்பிரமணிய மகா வித்தியாலயம் - புதுக்குடியிருப்பு. பி.ப 3 மணி - பி.ப 3.30 மணிவரையும், 22.11.2003 (சனி), வருவாய்ப்பகுதி செயலகம் - புளியங்குளம். காலை 8 மணி - காலை 9 மணிவரையும், விடத்தல் தீவு றோ.க பாடசாலை - பகல் 12.30 மணி - பகல் 12.45 மணி வரையும், கருங்கண்டல் றோ.க. பாடசாலை - கறுக்காய்குளம். பி.ப. 2 மணி - பி.ப. 2.30 மணிவரையும், மல்லாவி மத்திய கல்லூரி - மல்லாவி. பி.ப 4.30 - 5 மணிவரையும், 23.11.2003 (ஞாயிறு) காலை 8 மணி-11 மணிவரையும், வேம்பொடுகேணீ அ.த.க. படசாலை - பளை. பி.ப 3 மணி -பி.ப 3.30 மணிவரை கிளி. மத்தியகல்லூரி - கிளிநொச்சி.

பளை புளியங்குளம் ஆகிய இடங்களுக்கு வருபவர்களுக்கு நுழைவாயிலருகே ஊர்தி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## மின்விநியோக நேரம் அதிகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் விநியோகிக்கப்பட்டுவரும் மின்சாரம் விநியோக நேரம் சனி, ஞாயிறு தினங்களில் மாலை 4 மணி தொடககம் இரவு 10.30 மணிவரை கடந்த வாரம் முதல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வாரம் முழுவதும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரைக்கும், காலை 4 மணிதொடக்கம் காலை 6 மணிவரைக்கும் சேவை வழங்கப் பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

## வீடுகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கியுடெக் நிறுவன உதவித்திட்டத்தின் கீழ், குருநகர் பகுதியிலுள்ள 120 வீடுகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதுதொடர்பான பயனாளிகள் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. புனரமைப்பு பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு நிக்கொட் நிறுவனம் உதவிகளை மேற்கொள்ளவுள்ளது. (91)

## மாகாண மட்டத்தில் முதலிடம்

(நவிண்டில்)

கொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் கு.விஜிதன் - 15 வயதுப் பிரிவில் மாகாணமட்டத்தில் ஈட்டியெறிதலில் முதலாவது இடத்தையும், குண்டெறிதலில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவர் நாளை முதல் ஞாயிற்றுக் கிழமைவரை கொழும்பு சுகததாச மைதானத்தில் நடைபெறும் தேசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளார். (116)




# இணையம் ஆளும் இன்றைய உலகம்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இந்த **e-cash** பெறுமதி உலகம் முழுவதும் ஒன்றாகத்தான் இருக்கும். **e-cash** ஐ பாவிக்க விரும்பும் ஒவ்வொருவரும், தத்தமது பணத்தை **e-cash** இற்கு மாற்றியபின், **Internet** இல் இலகுவாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும்.

இதுவரை நாம் இணையம் பற்றிய ஓர் ஆரம்ப நிலையினைப் பார்த்தோம். இனி நாம் பார்க்கப்போவது, இணையத்தினுள் எவ்வாறு இணைந்துகொள்ளலாம் அல்லது இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது பற்றியதாகும்.

நாம் இணைய இணைப்பைப் பெறமுதல், இணைய முகவரிடமிருந்து **(Internet Service Provider)** இணையக் கணக்கொன்றைப் பெறுதல்வேண்டும். இலங்கையில் **ISP** ஆக, இலங்கை தொலைபேசி நிறுவனங்கள் தொழிற்படுகின்றன. இவ்வாறு தொழிற்படும் **ISP** இடம் இணையக் கணக்கைப் பெற்றவுடன், எமது **Server** உடன் தொடர்புகொள்ள, **Dial up Connection** ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். **ISP** இடம் கணக்கொன்றைப் பெறும்போது, எமக்குப் பின்வரும் விவரம் தரப்படுகின்றன.

1. **User Name** (பாவனையாளர் பெயர்)
2. **Password** (திறவுச் சொல்)
3. **Telephone No.** (தொலைபேசி எண் சேவருடன் தொடர்பு கொள்வதற்கு)

இவற்றைப் பெற்றுக்கொண்ட பின்னர், நாம் எமது கணினியிலுள்ள **My Computer** இல் **Double Click** செய்துவரும் **Win dow** இல் காணப்படும். **Dialvp Net working** ஐ **Double Click** செய்ய வேண்டும். இதில் பின்வரும் **Window** இல் **Make New connection** ஐ **Click** பண்ணியதும் **make New Connection Wizard** தோன்றும்.

இனி நாம் எமது **Dialup connection** ஐ அடையாளம் காண் பதற்கரன பெயர் ஒன்றைக் கொடுத்தல்வேண்டும். அத்து டன், நாம் பாவிக்கும் **Modem** வகையையும் **Select** பண்ண வேண்டும். இதன் கீழ் காணப்படும் **Configure** என்ற **button** ஐ **click** செய்வதன் மூலம் **Modem** இன் வினைத்திறனை மாற்றிக் கொள்ளலாம்.

இதன்பிறகு நாம் **Next button** ஐ **Click** செய்து, இரண்டாம் நிலைக்குச் செல்லுதல் வேண்டும். இதில் நாம் **Connect** செய்யவேண்டிய **Telephone number** ஐ கொடுக்க வேண்டும். இதனைத் தொடர்நது **Area code number** மற்றும் **Country code** என்பவற்றைக் கொடுத்தல் வேண்டும்.

இதன்பின்பு **Next button click** செய்ததும், **Success fully Created Message** வரும். பின்னர் **Finish button** ஐ **Click** செய்துவிட்டதும், **Dialup connection Icon** நாம் முதலில் கொடுத்த பெயரில் **Dialup Networking Window** தோன்றியிருக்கும்.

இந்த **Icon** இற்கு **Desktop** இல் **Shorcut** தோன்ற வேண்டுமாயின், மேற்படி **Icon** இல் **Right Click** செய்து, **Create Shortcut** என்பதைத் தெரிவு செய்யவேண்டும். பின்னர் இந்த **Icon** ஐ **Double Click** செய்யும் **Connect to window** தோன்றும். இதில் **ISP** எமக்குத் தந்த **User name** ஐயும் **Password** ஐயும் கொடுத்தல் வேண்டும்.

மறுமுறையும் **Password** கொடுக்க விரும்பாவிடின், **Save Password Option** ஐத் தெரிவுசெய்தல் வேண்டும். **Dialing from** என்ற **text box** இல் உங்கள் நிறுவனத்தின் அல்லது உங்களது பெயரைக் கொடுக்கவேண்டுமாயின், **Properties button Click** செய்து, **Dialing from** என்ற **path** இல் **Enter** செய்ய முடியும்.

பின்பு **Connect button** ஐ **Click** செய்ததும், **Modem** ஊடான **dialing** தொடங்கும். இதன்பின் **Internet Browser** ஊடாகப் பயனை நுகர்ந்துகொள்ளமுடியும். இவ்வாறு இணையத்தினுள் இணைந்து பல புதிய விடயங்களை அறிய ஆவலாக இருப்பது எல்லோரினதும் இயலபாகும். இந்த இயல்பை வளர்க்க இணையம் ஒரு உந்துசக்தியாக அமைகன்றது. இளைஞர், யுவதிகளின் இணைய **(Internet)** அனுபவமானது, குறிப்பாக விடலைப் பருவத்தினரின் **(Teenage)** அனுபவமானது மகிழ்ச்சி யானதாகவும், ஆரோக்கியமானதாகவும், வளர்சசிக்கு உறுதுணையாகவும் இருக்க, அவர்களுக்குப் பெற்றோர்களின் வழிநடத்தல் மிகவும் அவசியமாகின்றது.

இந்த வழிகாட்டலானது, இளைஞர்களின் எதிர்காலத்தைச் சரியானமுறையில் செப்பனிட உதவுகின்றது. இனி நாம் ஆபததுக்களாக அமைபவை பற்றி ஆராய்வோம்.

**பொருத்தமில்லாத தகவல்கள்**
**(Exposure to Inappropriate Materials)**

இணையத்தில் வக்கிரம், விபச்சாரம், பாலியல், வன்செயல், இனவாதம், சட்டவிரோத செயல்களைத் தூண்டுகின்ற கதைகள், கட்டுரைகள், படங்கள் என்பனவும் இருக்கின்றன. இந்த **Web pages** உங்கள் குழந்தைகளுக்குத் தவறான வழிநடத்தல்களை அளிக்கக்கூடும். எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் இணையப் பாவனையின்போது, மிக அவதானமாக இருக்கவேண்டும். ஏனெனில், இவ்வாறான கருத்துக்கள் இவர்களிடையே விபரீதமான சிந்தனைகளைத் தோற்றுவித்து விடலாம்.

**பாலியல் ரீதியான உடல் துன்புறுத்தல்கள்**
**(Physical Molestation)**

இவை இணைய உலகின் மிக ஆபத்தான விளைவு. இணையமானது **Chat-Line** மூலமாகவும், **e-mail** மூலமாகவும் தெரியாத புதிய நண்பர்களை உங்கள் பிள்ளைகளுக்குப் பெற்றுத் தருகின்றது.

இவ்வாறான நண்பர்கள் சிலர் நல்லவர்களாகவும், உண்மையான நட்பைப் பேணுபவர்களாகவும் இருப்பார்கள். ஆனால், இந்த நட்பைத் தீயநோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் இணைய இரைகொல்லிகள் **(Internet cyberbase Predators)** நிறையப் பேர் உள்ளனர்.

ஆரம்பத்தில் இந்த நட்பானது முகம் தெரியாமல், வார்த்தைகளின் நம்பிக்கையிலேயே ஆரம்பமாகின்றது. நாளடைவில் நட்பு மேலும் மேலும் இறுகி, இவர்கள் நேரில் சந்திக்க முயற்சிக்கக்கூடும். இவ்வாறு இரைகொல்லிகளிடம் அகப்படும் குழந்தைகள் - பெரும்பாலும் பாலியல் வதைகளுக்கு உள்ளாகின்றனர்.

**மனரீதியான துன்புறுத்தல்கள்**

பிள்கைள் **Chat - Line** அல்லது **e-mail** ஊடாக பாலியல் அல்லது வேறு பொதுவான மனரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகலாம்.

அதாவது, ஒருவரைக் கொலை செய்வதாகவோ அல்லது அவரது சொத்தினைக் கொள்ளை அடிப்பதாகவோ பயமுறுத்தல்.

மேலும் ஆபாச படங்களை அனுப்புவதனூடாக, ஒருவரின் மன உளைச்சலை தூண்டிவிடுதல் என்பவற்றைக் காணலாம். மேற்கூறிய ஆபத்துக்கள் இணையத்தில் இருப்பதால், இணையத்தினைப் பிள்ளைகள் உபயோகிப்பதைப் பெற்றோர் தடைசெய்வது சரியான தீர்வாகாது. இப்படித்தடை செய்வதானது- கல்லூரியில் குற்றங்கள் நடக்கின்றது என்பதைக் காரணம் காட்டி, பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பாது நிறுத்துவதற்குச் சமனாகும்.

எனவேதான், நாளாந்தக் கடமைகளில் பிள்ளைகளைப் பெற்றோர்கள் எவ்வாறு வழிநடத்துகின்றார்களோ, அதே மாதிரியான பொறுமையான வழிநடத்தல்தான் இணையத்தைப் பொறுத்தவரை தேவைப்படுகின்றது.

இணையத்தைப் பற்றி சரியான அறிவைப் பெற்றோர் பெற்றுக்கொண்டு, குழந்தைகளைச் சரியானமுறையில் வழிநடத்த முன்வரவேண்டும். பெற்றோர்கள் இணையம் பற்றிய போதியளவு அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு, பிள்ளைகள் கற்கும் ஆசிரியர்கள், நூலகர்கள், சக குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் உங்கள் குழந்தைகள் என்போரிடம் உரையாடி, நீங்கள் நிறைய விடயங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் பெற்றோர்கள் இணையம் பற்றி அறிந்துகொள்ள வேண்டியவை இன்னும் உள்ளன. திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்புக்கள், படங்களை "வயது வந்தவர்களுக்கு மட்டும்" என்று வகைப்படுத்துவதைப்போல, இணையமும் வயது வந்தவர்களுக்கு மட்டுமான **Web** பக்கங்களைக் கொண்டுள்ளது.

இவற்றில் வளர்ந்தவர்களுக்கான படங்கள், கதைகள், கட்டுரைகள் உள்ளன. இதனால், இளைஞர்கள் **(Teenage)** இணையத்தில் வலம்வரும்போது, இந்தப் பக்கங்களைச் சந்திக்க நேரலாம். இந்தப் பக்கங்கள் இந்த வயதுடையவர்களுக்கு உகந்தவை அல்ல.

அதாவது, ஒரு விடயத்தினை இணையத்தில் தேடுவதற்கு **Search Engine** (தேடற் பொறிகள்) துணை புரிகின்றன. உதாரணமாக- மாணவர்கள் **SHORT STORIES** என்ற விடயத்தை **SEARCH** செய்யும்போது **ADULT STORIES** என்ற இணைய பக்கங்களும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடும்.

இவ்வாறான விரும்பத்தகாத **web** பக்கங்களை வடிகட்டி, நல்ல விடயங்களை மட்டும் தருவதற்கு **Filter programms** நிறைய இருக்கின்றன. ஆனால், இவையெல்லாம் பூரணமானவை அல்ல.

சில நல்ல விடயங்களைக்கூட அவை வடிகட்டிவிடக் கூடும். ஆகவே, பெற்றோராகிய நீங்கள் - உங்கள் பிள்ளைகள் இணையத்தினை உபயோகிக்கும்போது, உடனிருந்து வழி நடத்துவதுதான் வடிகட்டலை **(Filter)** விடச் சிறந்தமுறை யாகும். பின்வரும் **Filter Program** ஐ நீங்கள் விலைக்குப் பெற்று பயன்படுத்தலாம். **"Net Nanny"** இது பற்றிய மேல திக விபரத்தை **http://www.net nanny.com** இல் பெறலாம்.

இதுவரையும் நாம் இணையமும், அதன் பயன்பாடும், அதனால் ஏற்படும் சாதாகபாதக விளைவுகளையும், பெற்றோர்கள் எவ்வாறு தமது பிள்ளைகளை இணையப் பாவனையில் கண்காணித்தல் வேண்டும் என்பதையும் பார்த்தோம். இனி நாம் பார்க்க இருப்பது பயனுள்ள அரச இணையத்தளங்கள் ஆகும்.

**1.www.gov.lk**

இதன் **Home page** இல் உள்ள லிங்குகளை **Click** செய்தவன் மூலம், எமக்கு தேவையான தகவல்களை சேகரித்துக் கொள்ளலாம்.

இத்தளத்தின் பிரதான நன்மைகளாகப் பொது நிர்வாக சுற்றறிக்கைகளையும், வர்த்தமானிப் பத்திரிகைகளையும் உடனுக்குடன் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

(குறிப்பு - இதில் இதன் **Home page** ஐ போடவும்)

**2.http://selection.ugc.ac.lk.**

இது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணையத்தளமாகும். இத்தளம் **G.C.E. (A/L)** மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மிகவும் பயனுடையதாகும்.

இத்தளத்தினூடாக **A/L** மாணவர்கள் வெட்டுப் புள்ளி விபரங்களையும், அவர் எந்தப் பல்கலைக்கழகத்துக்கு, எப்பாடநெறிக்குத் தெரிவானார் என்பதையும் அறியமுடியும்.

மேலும் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகள் மற்றும் புலமைப் பரிசில் விபரங்களையும் அறியமுடியும்.

**3.www.lankaworld.com**

இத்தளத்தினூடாக தினசரி செய்திகளை அறிய முடிவதுடன், எமது நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளின் இணையப் பதிப்புக்களையும் அறியலாம். மேலும், இத்தளம் உருவாக்கியுள்ள **Mailing list** இலும் இணைந்து எமது கருத்துக்களை ஏனையவர்களுடன் பரிமாறிக்கொள்ள முடியும்.

மேலும் நம் நாட்டு காலநிலையுடன், அன்றாட வெப்ப நிலைகளையும் அறிந்துகொள்ளமுடியும். **Download** என்ற பகுதியினூடாக எமக்கு விரும்பியவற்றை எமது கணினியில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**4. www.worldbank.lk.**

இத்தளத்தினூடாக இலங்கையில் உலக வங்கியின் செயற்பாட்டினை எந்நேரமும் அறிந்து கொள்ளலாம். மேலும், இலங்கையில் உலக வங்கி நிதி வழங்கும் அபிவிருத்தி திட்டங்களின் செயற்பாடுகள் குறித்த தகவல்கள், அறிக்கைகள், மேலும் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டம் தொடர்பான செய்திகளை அறிந்துகொள்ளலாம். இதில் உலக வங்கியின் பிரதான இணையத்தளத்திற்கு இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளமை சிறப்பான அம்சமாகும். *(தொடரும்)*

**எஸ்.ஜெயானந்தன்**
**விரிவுரையாளர் (வருகை),**
**யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி.**

# தொழில் வங்கி



| நிறுவனம் | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் கொழும்பு - 10 | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் கொழும்பு - 10 |
| --- | --- | --- |
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | கணினி இயக்குநர் (ஒப்பந்த அடிப்படை) | பட வரைஞர் (ஒப்பந்த அடிப்படை) |
| அடிப்படைத் தகுதி | க.பொ.த (சா/த)<br>இரு தடவைக்கு மேற்படாத அமர்வு. ஆறு பாடங்களில் சித்தி, அத்துடன் மொழி, கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி<br>6 மாதத்திற்கு குறையாத கணினிப் பயிற்சி நெறி.<br>ஆறு மாத அனுபவம்.<br>வயதெல்லை - 18 - 40 | க.பொ.த (உ/த) விஞ்ஞான பிரிவு ஒரே அமர்வு 3 பாடங்களில் சித்தி.<br>க.பொ.த (சா/த) இல் 2 தடவைக்கு மேற்படாத அமர்வு, 6 பாடங்களில் சித்தி, மொழி, கணிதம் விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி. சான்றிதழ் ஏதாவதொன்றில்- தொழில்நுட்பவியல்/எந்திரவியல்/எந்திரவியல் படவரைஞர்/பயிலுநர் படவரைஞர் அல்லது சமமான உயர் தகைமைகள்<br>வயதெல்லை - 21 - 60 |
| விண்ணப்ப முடிவு திகதி | 30.09.2003 | 30.09.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# அதிகரிக்கும் நாகரிக மோகத்தால்



**அனுமதி பெற்ற மட்பாண்ட கைத்தொழிலை முழுநேரத் தொழிலாகக் கடந்த இருபது வருடங்களாக மேற்கொண்டுவரும் ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த மாரிமுத்து பரமநாதம் அவர்களுடனான நேர்காணலின் தொகுப்பு இது.**

**நீங்கள் இந்த தொழில் முயற்சியைத் தெரிவு செய்தமைக்கான காரணம் யாது?**

எனது தந்தையார் மட்பாண்ட தொழிலையே தனது தொழில் முயற்சியாக மேற்கொண்டு வந்தார். நானும் எனது இரு சகோதரர்களும் சிறுவயது முதலே தந்தைக்கு உதவியாக நின்று, தொழிலை முழுமையாக விளங்கிக் கொண்டோம். அதனாலேயே இன்று நாங்கள் மூவரும் தனித்தனியாகத் தொழிலில் ஈடுபடக்கூடியதாகவுள்ளது. நானும் இன்னொரு சகோதரரும் யாழ்ப்பாணத்திலும், மற்றயவர் வன்னியிலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறோம்.

**தொழிலின் தன்மை பற்றிக் கூறுங்கள்?**

இது ஒரு பாரம்பரிய கைத்தொழிலாகும். முன்னர் சக்கரத்தைக் கைகளால் சுற்றியே பாத்திரங்களை வடிவமைத்தோம். ஆனால், தற்பொழுது மின்சாரம் மூலம் இயந்திரங்களை இயக்கி மட்பாண்டங்களை வடிவமைக்கின்றோம். களிமண்ணைக் கரைத்து, வடித்து, இறுகவிட்டு, பின்னர் தேவையான பதத்தில் சக்கரத்தில் வைத்து பாத்திரங்களை வடிவமைப்போம். ஒரு பாத்திரம் - சூலைக்குப் போகும் முன்னர்,



அதன் வேலை முடிய குறைந்தது நான்கு நாட்களாவது எடுக்கும். ஒரு நாளைக்கு ஐம்பது பாத்திரங்கள்வரை எம்மால் உருவாக்கமுடியும். ஒரு சூலையில் ஐநூறு பாத்திரங்கள்வரை வைக்கமுடியும். எனினும், அவ்வாறு சூலையில் வைத்து எடுக்கும்போது, எப்படியும் எழுபத்தைந்து பாத்திரங்கள்வரை உடைந்துவிடும். அதனைத் தவிர்க்கமுடியாது.

**மூலப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளதா?**

இப்பொழுது ஓரளவிற்கு இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. முன்னைய காலங்களில் மிகக்குறைவான விலையில் பெற்றுக்கொண்ட களிமண், இப்பொழுது ஒரு லொறி பதினைந்தாயிரம் ரூபா தொடக்கம் இருபதினாயிரம் ரூபாவரை விலை பேசப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம்- போக்குவரத்துக் கூலி அதிகரித்தமையாகும். மட்பாண்ட களிமண்ணை- முருங்கன், ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் இருந்தே பெற்றுக்கொள்ளமுடியும். ஏனைய பொருட்களான விறகு, வைக்கோல் தென்னம்மட்டை போன்றவற்றை இங்கேயே பெறமுடியும்.

**உங்களுடைய உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

முடிவடைந்த மட்பாண்டங்களைச் சந்தைப்படுத்தலுக்கான போக்குவரத்து சாதனங்கள் என்னிடம் இல்லை. அதனால், வீட்டிலேயே வைத்து விற்பனை செய்கின்றேன். இப்பொழுது ஒரு சட்டி பன்னிரண்டு ரூபா விலையிலேயே வியாபாரிகள் பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், சந்தை விலை முப்பது ரூபாவாகக் காணப்படுகின்றது. வாகன வசதி இருப்பின், நானே

## பாரம்பரிய கைத்தொழில் இழக்கப்படுமா?

எனது உற்பத்திகளைச் சந்தைக்குக் கொண்டுசெல்லமுடியும். வாகன வசதி இன்மையால், பெருமளவு வருமானத்தை இழக்க வேண்டியுள்ளது. அத்தோடு ஆடி, புரட்டாதி மாதங்களில் உற்பத்தியின் தொகை அதிகரித்தாலும், நேரடியாகச் சந்தைப்படுத்த முடியாதநிலையே காணப்படுகின்றது.

**உங்களுடைய உற்பத்திக்கு பதிலீட்டுப் பொருட்களால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிக் கூறமுடியுமா?**

இன்றைய நவநாகரிக மோகத்தால், பெருமளவான மக்கள் சில்வர், அலுமினியம் போன்ற பாத்திரங்களையே பெருமளவில் பாவிக்கிறார்கள். கிராமப்புற மக்களில் ஒரு சிலரே மட்பாண்ட பாத்திரங்களைத் தற்போதும் பாவிப்பதைக் காணமுடிகிறது. சில்வர், அலுமினியப் பொருட்களின் ஆதிக்கத்திற்கு இன்னோர் காரணமும் உண்டு. களிமண்ணை யாழ்.நகரில் பெறமுடியாது. தூரஇடங்களில் இருந்தே பெறவேண்டியிருப்பதால், அதன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் ஒரு காரணமாகும். மண்பானை அல்லது கூசாவில் நீர்வைத்து குடிக்கும்போதுள்ள சுகம், சில்வர் பானையிலோ அல்லது அலுமினியப் பானையிலோ பெறமுடியாது.

**மட்பாண்டங்களில் சமைக்கும் பொழுது, ஒரு தனித்தன்மையான உணவைப் பெறமுடியுமா?**

நிச்சயமாக ஒரு தனித்தன்மையான சுவையான உணவைப் பெறமுடியும். மட்பாண்ட பாத்திரங்களில் எவ்வித இரசாயன பதார்த்தமும் தோற்றுவிக்கப்படமாட்டாது. அலுமினியச் சட்டி, அலுமினியக் கரண்டிகளினால் உணவைத் தயாரிக்கும் பொழுது, இரண்டு அலுமினியமும் ஒருவித இரசாயனத்தைத் தோற்றுவிப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இப்போதும் தமிழ் வைத்திய முறைப்படி, உணவை பத்தியமாக உட்கொள்பவர்கள் - மண் பாத்திரங்களையே பாவிப்பதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

**இறுதியாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

எமது இந்த மட்பாண்ட தொழில், பாரம்பரிய தொழில். இந்தத் தொழில் இனிவரும் காலங்களில் இல்லாமல் போகும் தன்மை காணப்படுகின்றது. அதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஏனெனில், இப்போதைய பதிலீட்டுப் பொருட்களின் தாக்கமே காரணமாகும். அரச நிறுவனங்களும், ஏனைய அமைப்புக்களும் ஊக்குவிப்பு உதவிகளை வழங்கி, இந்தக் கைத்தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஆவண செய்யவேண்டும். அத்தோடு, அருகிவரும் நிலையிலுள்ள இந்தத் தொழில் சார்பான கல்வித் திட்டங்களையோ, ஆலோசனைக் கருத்துக்களையோ இவை சார்பான அமைப்புக்கள் மேற்கொள்ளவேண்டும் என்பதே இந்தத் தொழில் சார்பான இன்றைய நிலைப்பாடு ஆகும்.

**நேர்காணல் :**
***காவலூர் விஜேந்திரன்***

# எளிய முறையில் ஓர் எலிப்பொறி

எலிகளால் பரவும் பிளேக் நோய் பற்றி அறிந்திருப்பீர்கள். இதைவிட, ஒட்டுண்ணிவகை புழுக்களால் ஏற்படும் அமீபா வயிற்றுளைவு மற்றும் றைகினோசிஸ் (**Trichinosis**) முதலிய தொற்றுதலுக்குட்பட்ட உணவு மற்றும் நீர் மூலம் பரவும் நோய்களைப் பற்றியும் தெரிந்திருப்பீர்கள். இந்த வகையான தொற்று நோய்களைப் காவித்திரியும் ஒருவகை இலவச உயிரியாக இந்த எலிகள் தொழிற்படுகின்றன. மேலும், வீடுகளில் வாங்கிச் சேமிக்கப்படும் தானியங்கள் தொடக்கம், உடுபுடவைகள்வரை அனைத்துமே இந்த எலிகளின் வாயில் அகப்பட்டு வீணடிக்கப்படுகின்றன. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை, எலிகளைக் கட்டுப்படுத்த எமக்குத் தெரிந்தது இரண்டு வழிகள் தான். ஒன்று இரும்பாலான எலிப்பொறிகளைப் பயன்படுத்துதல் அல்லது பூனைகளை வளர்த்தல். இதில் முதலாவது வழிமுறையில் ஓர் பொறியின் மூலம் ஓர் எலியே ஒரு தடவை பிடிக்கப்படலாம். இன்னொரு எலியைப் பிடிக்க வேண்டுமெனில், மீண்டும் பொறியைச் சீரபடுத்தவேண்டும். அதாவது, எலிகளை இந்த வழியில் கட்டுப்படுத்த நீண்டகாலம் தேவைப்படும். இரண்டாவது வழிமுறை மூலம் எலிகளைக் கட்டுப்படுத்த பூனை வளர்க்கப்படுகிறது. பூனைகளால் தொல்லைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பது மட்டுமன்றி, சிலவேளைகளில் எலிகளும் பூனையும் சமரச முயற்சியில் ஈடுபடுமாயின், எமது எலி அழிப்பு முயற்சி தோற்றுப்போகும்.

எனவே, எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உகந்த, மிகவும் இலகுவானதும், எளியதுமான ஓர் வழிமுறை பற்றி சற்று விரிவாக ஆராய்வோம். இந்த வகையான எலிப்பொறி ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு எமக்கு ஓர் வாளி, ஓர் கம்பித்துண்டு, ஓர் சோளம் பொத்தி மற்றும் சிறிதளவு நூல் என்பவை போதுமானவை. எலிப்பொறியைத் தயார்ப்படுத்தும் செயன்முறை பற்றிப் பார்க்க விளைகையில், இருபது லீற்றர் கொள்ளவுடைய வாளி அல்லது சம கொள்ளளவுகொண்ட பானை ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். எலிகள் நடமாட்டம் அதிகமுள்ள இடமொன்றைத் தெரிவுசெய்து, அங்கே வாளியை அல்லது பானையை நிலமட்டத்துடன் அல்லது வேறு ஏதாவது பொருட்களின் மட்டத்துடன், அவற்றின் வாய்ப்பகுதி இருக்கத் தக்கவாறு புதையுங்கள். அடுத்து, நன்கு உலர்ந்த சோளம் பொத்தி ஒன்றை எடுத்து, அதன் இரு முனைகளையும் நன்கு அழுத்தமாக வெட்டியகற்றிய பின், சுமார் 50 செ.மீ நீளமான தடித்த கம்பி ஒன்றை எடுத்து, சோளப்பொத்தியின் நடு அச்சினூடாக அதனைச் செலுத்தி, பொத்தியானது கம்பியின் அசசுப் பற்றி இலகுவான முறையில் சுழலச் செய்யவும். இனி கம்பியின் அச்சுப்பற்றி சோளப்பொத்தியானது, முன்பின் அசையாதவாறு பொத்தியின் இருமருங்கிலும் நூல்கொண்டு கம்பி அச்சில் சிறுதடைகளை ஏற்படுத்துக. சோளப்பொத்தியுடனான இந்தக் கம்பியைத் தொடர்ந்து, படம் 1 இல் காட்டியவாறு வாளி அல்லது பானையின் வாயின் குறுக்காக வைத்து, கம்பியின் இரு முனைகளையும் வளைத்து, நிலத்துடனோ அல்லது வேறு பொருட்களுடனோ நன்கு இறுக்கமாக




இணைத்துவிடுங்கள். அடுத்து வாளி அல்லது பானையினுள் அதன் அடியிலிருந்து அண்ணளவாக 15 செ.மீ உயரத்திற்கு தண்ணீரை நிரப்புங்கள்.

இப்போது நீங்கள் ஓர் எலிப்பொறியைத் தயார்ப்படுத்தி விட்டீர்கள். இனி எலிகளை இலகுவாகக் கவரக்கூடிய, நீரத் தன்மையான உணவுப்பதார்த்தங்களை (உதாரணமாக- மாஜரின், பட்டர் போன்றவை) சோளம் பொத்தியின் மேல் நன்கு பூசி விடுவீர்களானால் உங்கள்பாடு கொண்டாட்டம். எலிகள்பாடு திண்டாட்டம்தான். இரை தேடி வரும் எலிகளின் கண்ணில் சோளப் பொத்திச் சாப்பாடு பட்டால், பார்த்துவிட்டுச் சும்மாவா போகும். உண்ணவிளைகையில், சோளப்பொத்தி சுழல்வதால், அவை நீருக்குள் தவறி வீழ்ந்து, உங்கள் பொறிக்குள் அகப்பட்டுக்கொள்ளும். உள்ளே விழுந்த எலிகள் வெளியேற வழி தெரியாது, தண்ணீருக்குள்ளேயே உயிரை விடுகின்றன. ஈப்பொறி சமாச்சாரம்போல, அகப்பட்ட எலிகளை எடுத்து பூனைகளுக்கோ அல்லது நாய்களுக்கோ விருந்தளிக்கலாம்.

இந்த வகையில் எளிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி, குறைந்த செலவில் பல உபகரணங்களையும், பொறிகளையும் உருவாக்குவோமானால், எம்மையும் எமது சூழலையும் வளம்படுத்திக்கொள்வதோடு, இந்த வகையான பொறிகள் தயாரிப்பதை ஓர் கைத்தொழிலாக மேற்கொண்டால், பொருளாதார ரீதியாகவும் எம்மை முன்னேற்றிக்கொள்ளலாம். இவ்வாறான் வழிகளில் சிந்தித்துச் செயலாற்றாது, தொடர்ந்தும் மாற்றார் கைத்தயாரிப்புகளையே நம்பியிருப்போமானால், அவர்களை வளர்ச்சியடைய வைக்கும் புண்ணியவான்களாகவே நாமிருப்போம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

தந்தவர்:
**ச.நகுலேஸ்வரன்** *(உதவி விரிவுரையாளர்)*
விவசாய இரசாயனவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | கன்னாதம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சங்கானை | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 30/= | 30/= | 40/= | 15/= | 15/= | 40/= |
| வெண்டிக்காய் | 15/= | - | 25/= | 30/= | 15/= | 10/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 60/= | 60/= | 65/= | 60/= | 70/= | 70/= | 60/= |
| கத்தரிக்காய் | 30/= | 30/= | 25/= | 30/= | 30/= | 70/= | 60/= |
| பாகற்காய் | 50/= | 40/= | 40/= | 50/= | 40/= | 50/= | 60/= |
| கரட் | 30/= | 40/= | 50/= | 60/= | 30/= | 30/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 20/= | 15/= | 30/= | 30/= | 10/= | 40/= |
| முருங்கைக்காய் | 80/= | 100/= | 90/= | 100/= | 60/= | 50/= | 80/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 30/= | 25/= | 30/= | 30/= | 40/= |
| பச்சைமிளகாய் | 60/= | 40/= | 40/= | 50/= | 40/= | 40/= | 60/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*சிறுகாப்பின் பேரிடத்தது ஆகி உறுபகை*
*ஊக்கம் அளிப்பது அரண்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

# பொங்கு தமிழர்க்கு இன்னல் விழைந்தால்...

'எமது வீடுகளுக்கு நாங்கள் செல்வதற்காக, படையினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்' என்ற - நியாயமானதும், எவராலும் நிராகரிக்க முடியாததுமான கோரிக்கையை பிரதான மையக் கோட்பாடாகக் கொண்டு - வவுனியாவில் பொங்கு தமிழ் நிகழ்வுகள் நேற்றைய தினம் ஆரம்பமாகியது.

"சிங்களம்சேர் தென்னாட்டு மக்கள் தீராதி தீரரென்றூது சங்கே... பொங்கு தமிழுக்கு இன்னல் விழைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு" என்ற புரட்சிக் கவி பாரதிதாசனின் வீறுமிக்க கவிதை வரிகளில் இணைந்துள்ள சத்தியவார்த்தைகள் ஜீவன்கொண்டு எழுச்சியுறுமாப்போன்று பொங்குதமிழ் நிகழ்வுகள் தடைதகர்த்து, உணர்ச்சிபொங்க கடந்த காலங்களில் நடைபெற்று வந்துள்ளமை அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

இன்னும் சொல்வதானால், சாதாரண தமிழ்மக்களின் சாத்வீக ரீதியிலான உணர்வெழுச்சியுடன் கூடிய உரிமை சார் போராட்ட வடிவங்களில் ஒன்றாகவே பொங்குதமிழ் நிகழ்வுகள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு, ஒரு வன்முறை சார்ந்த மக்கள் கிளர்ச்சியின் அங்கமல்ல. அரசியல் இலாபங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் பிரசார நடவடிக்கையுமல்ல.

தமிழ்மக்கள் தம்மீதான அரச ஒடுக்குமுறைகளுக்கும், இராணுவ ரீதியிலான அடக்குமுறை ஆக்கிரமிப்புக்கும் ஆட்சேபம் தெரிவித்து தமது எதிர்ப்பை ஒன்றிணைந்து, எந்தவிதமான அச்சத்திற்கும் ஆட்படாது பகிரங்கமாக, ஏகோபித்த குரலில் வெளிப்படுத்துவதே பொங்கு தமிழின் ஒரே இலக்காகும்.

இங்கே பேசுபொருளாக இருப்பது, மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் பற்றிய விடயமேயாகும்.

இங்கே பாடுபொருளாக இருப்பது மானுட சுதந்திரம் பற்றிய மானுட ஆத்மாக்களின் இதயராகங்களேயாகும்.

இந்த நிகழ்வு உலகிற்கு எடுத்துரைக்கப்போகும் பிரதான செய்தி - தமிழ்மக்களின் வாழ்வு எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல அதை ஏன், எவ்வாறு மீட்கப்படவேண்டும் என்பது பற்றியதுமாகும். இதில் குற்றமோ, தவறோ எதுவும் கிடையாது.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால், தமிழ்மக்கள் தம்மை உணரவும், தம் மண்ணை உணரவும் மட்டுமல்ல தாம் யார் என்பதை சர்வதேசத்திற்கும், தென்பகுதியினருக்கும் உணர்த்துவதுடன், தாம் தமிழராய்ப் பொங்கியெழுவது தமிழன் என்ற தனித்துவ அடையாளத்தை உலகளாவிய ரீதியில் உறுதிப்படுத்தி ஓங்கி பிரகடனம் செய்வதற்கும்தான்.

இதன் காரணமாகத்தான் பொங்குதமிழ் நிகழ்வை-அதன் ஆர்த்தெழு நிலையை, எழுச்சிப் பேரொலியை பேரினவாதிகளாலும், அவர்களின் அடியாட்களாலும், பாதுகாப்புப் படையினராலும் பொறுக்கமுடியாத விடயமாகியுள்ளது.

மக்கள் சம்பந்தப்பட்ட, மக்களால் நடத்தப்படும், மக்களின் விழாவிற்கு அதே மக்களில் சிலரை அவர்கள் வெறும் அரச ஊழியர்கள் என்பதற்காக - அதில் கலந்து கொள்ளக்கூடாதென்றும், கொடியேற்றக்கூடாது, பாடசாலை மாணவர்கள் அந்த நடவடிக்கையில் ஈடுபடக்கூடாதென்றெல்லாம் தடைவிதித்தார்கள், கட்டுப்பாடு கொண்டுவந்தார்கள்.

அதனை விடுதலைப் புலிகளின் நிகழ்வாகச் சித்திரிக்கவும் பிரசாரம் செய்யவும் முயன்றார்கள். கண்காணிப்புக் குழுவுக்குத் தலையீடு செய்யுமாறு முறைப்பாடும் செய்தார்கள்.

இன்னும் என்னென்னமோ கூறி, அந்த நிகழ்வவைத் தடுக்க முயன்றார்கள்.

இது 'பொங்குதமிழ்' என்பதை மறந்து, பொறுக்க முடியாத ஒரு வெறியுடன், மக்களின் உணர்வெழுச்சியைத் தடுக்கமுயன்றார்கள். எனினும் என்ன - பொங்கு தமிழ் உணர்வின் பூரிப்புடன் கூடிய எழுச்சியின் முன்னால், அவர்களின் செயற்பாடுகள் அர்த்தமற்றவையாகின.

இதுதான் கடந்த காலங்களில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுகளின் போதும் நடைபெற்றது. அனுபவத்திலிருந்து படைத் தரப்பும், பேரினவாத சக்திகளும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பது பரிதாபமான விடயமே.

எமது வாழ்விடங்கள் மீதான ஆக்கிரமிப்புகள் விலக்கப்படவேண்டும்.

எமது ஊர்களுக்கு நாம் போகவேண்டும்.

எமது இல்லங்கள், நிலங்கள் எமக்கானதாக வேண்டும்.

எம்மை நாமே நிர்வகிக்க இடைக்கால நிர்வாகசபை வேண்டும். நிரந்தர சமாதானமும், நிரந்தர அரசியல் தீர்வும் எமக்கு வேண்டும். பொங்கு தமிழ் வலியுறுத்தும் நியாயபூர்வமான கோரிக்கைகள் இவைகளே.

அரசும் - அதிகார ஜனாதிபதியும், தமிழ்ப்பகுதிகளில் தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் படைத்தரப்பும், இதிலுள்ள நியாயத் தன்மையைப் புரிந்து கொள்ளவேண்டிய வரலாற்றுக் காலகட்டம் இதுவேயாகும். இது தவறும் பட்சத்தில்... தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளும் தொடரும் பட்சத்தில்...

பாரதிதாசனின் இறுதி வரிகளை நினைவிற் கொள்வது சம்பந்தப்பட்டோருக்கு அவசியமானது, நல்லது.

## நாடும் நடப்பும்




# இனவாதத்தால் அழிவுபட்டுள்ள நாட்டினை கட்டியெழுப்ப திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன

## அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

(கொழும்பு)

குறுகிய இனவாத அரசியலால் அழிவுபட்ட நாட்டை, மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது எனத் தெரிவித்துள்ளார் - மக்கள் தொடர்பாடல்அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்.

சவூதி அரேபியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் இம்தியாஸ், இலங்கை தூதரகத்தில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

எமது நாட்டை, துரதிஷ்டவசமாக இருந்த காலத்தில் இருந்து, கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. தற்போதுள்ள நிலையிலே நாம் எமது நாட்டை, எதிர்கால சந்ததியிடம் கையளிக்க முடியாது. எமது நாட்டை மரணபீதியற்ற புதிய நாடாக அபிவிருத்தி செய்யவேண்டும். பல வழிகளிலும் எமது நாடு முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.

உலகின் எந்த பாகத்தில் இருந்தாலும், நாட்டின் அபிவிருத்திக்குத் தமது பங்களிப்பை நல்கவேண்டியது இலங்கையர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

குறுகிய இனவாத அரசியலினால் எமது நாட்டை குட்டிச்சுவராக்கியுள்ளோம். சுயலாப அரசியல் நோக்கமே இனப்பிரச்சினைக்குத் தூபம்போட்டு வளர்த்து எடுத்திருக்கிறது. இதனை நாம் அடியோடு மாற்றியாகவேண்டும்.

இரு தசாப்த காலமாக நடந்த கொடிய போரின் கைகளில் இருந்து விடுபட்டு, நாடு இன்று அமைதி வழிக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. பொருளாதாரரீதியிலே பலம் பெற்று வருகிறது. உலகின் எந்தப் பாகத்திற்குச் சென்றாலும் மதிப்பும், கௌரவமும் ஏற்படும் வகையிலே நாம் இலங்கையை கட்டியெழுப்பவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது, சவூதி அரேபியாவிற்கான இலங்கை தூதுவர், தூதுவர் பணிமனை உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலை புலிகள் விடுத்த அழைப்பை ஏற்று சுகாதார ஊழியர்கள் கடமைக்குத் திரும்பினர்

விடுதலைப்புலிகளின் இருபது உறுப்பினர்கள் வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று, அங்குள்ள தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, உடனடியாக வேலைக்கு வருமாறு அழைப்பு விடுத்ததாகவும், அதன்பின் ஊழியர்கள் வேலைக்கு வந்து சுமுகமான முறையில் கடமைகளைத் தற்பொழுது வவுனியா வைத்தியசாலையில் செய்து வருவதாக, பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஊழியர்கள் தற்போது கடமைக்கு வருவதால், தொடர்ந்து பொலிஸ், இராணுவத்தினரின் உதவி அவசியமில்லை என்றும் வைத்திய அதிகாரி பத்மநாதன் சத்தியலிங்கம் - வன்னி இராணுவ தலைமைப்பீடத்துக்கும், பொலிஸ் அதிகாரி ரி.ஜே.மிஸ்கினுக்கும் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே, உதவிகள் புரிந்த இராணுவ, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வைத்திய அதிகாரி நன்றி தெரிவித்துக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தியத்தலாவ பயிற்சி முகாமிலிருந்து வவுனியாவுக்கு படையினர் அழைப்பு

தியவத்தலாவ இராணுவ பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற இருநூற்று ஐம்பது படைவீரர்கள் வவுனியாவிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

வவுனியாவிற்குக் களப்பயிற்சிகளை மேற்கொள்வதற்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக வவுனியா இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்தி பால - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக தெரிவித்தார்.

வவுனியாவில் அடிக்கடி கேட்கின்ற துப்பாகி வேட்டுக்களுக்கு காரணம் - இராணுவ வீரர்கள் பயிற்சியின்போது தீர்க்கப்படுகின்ற வேட்டுக்களே என்றும், அதனால் மக்கள் பதற்றமடையத்தேவையில்லை எனவும் வவுனியா இராணுவக் கட்டளை அதிகாரி மேலும் தெரிவித்தார். (03)

# பட்டதாரி அல்லாத ஆறு பேருக்கு பட்டதாரி நியமனம் வழங்கப்பட்டன

பட்டதாரி அல்லாத ஆறு ஆசிரியர்களுக்குப் பட்டதாரி தரத்துடன் வழங்கப்படும் கல்வி முகாமைப் பதவி வழங்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் பழிவாங்கல் என்ற சலுகையின் அடிப்படையில், இந்த ஆறுபேருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதென்று அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

கல்விச் சேவையில் 2400 பேர் - கல்வி முகாமைத்துவப் பதவிக்குப் போதுமானதாக இருந்தும், இப்பொழுது 9000 பேர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்களுக்கு, பதவி உயர்வு வழங்கும் இத்திட்டத்தில், மாகாணசபைகளில் கடமையாற்றும் பல ஊழியர்கள் இந்தச் சலுகையைக் கோரியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் அதிபர்கள், உப அதிபர்களாக 12500 பேர் போதுமானதாக இருந்தும, தற்பொழுது 16,500 பேர் பாடசாலைகளில் கடமையாற்றுகிறார்கள் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அரச வங்கிகளில் முக்கியஸ்தர்கள் பெற்ற 12 பில்லியன்ரூபா மீளச்செலுத்தவில்லை

இலங்கை அரச வங்கிகளில் முக்கியஸ்தர்கள் இன்னமும் தாம்பெற்ற கடன்களை மீளச்செலுத்தாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலின பண்டார தென்னக்கோன் நேற்று நாடாளுமன்றம் கூடியபோது இத்தகவலைத் தெரிவித்தார்.

கடன்களை மீளச்செலுத்தாமலுள்ள முக்கியஸ்தர்கள் 103 பேரின் கடன்களின் முழுப்பெறுமதி - 12 பில்லியன் ரூபா எனவும் தென்னக்கோன் தெரிவித்தார்.

இவ்வாறு அறவிடப்படாது இருக்கும் கடன்கள் முழுமையாக அறவிடப்பட்டால், பொருளாதாரத்தின் துறையில் மிகவும் வளர்ச்சி ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் - வங்கிகளுக்குள் அரசியலை நுழைப்பதாலேயே, அரச வங்கிகளில் வங்குரோத்து நிலைமை உள்ளாகி இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

வங்கிக் கடனை மீளப்பெறாதுவிட்டால், பொருளாதாரததில் நிதிப் பற்றாக்குறை ஏற்படும் எனவும், வட்டி வீதம் குறைவடையும் நிலை தோன்றும் எனவும், தனியார் வங்கிகள் தமது இலாபங்களை அதிகரிக்கும் வழியில் இவை அமையும் எனவும், சரத் அமுனுகம தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும், இது தொடர்பாக அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டுமெனவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

# எல்லா அரசியற் செயற்பாடுகளும்
# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கே

என்றும் இல்லாதவாறு மீண்டும் நாட்டின் பல பகுதிகளிலும் இனவாதக் கருத்துக்கள் தலைதூக்கியுள்ளன. இம்முறை அது பரந்தளவிலான மக்கள் ஆதரவை நோக்கி நகர்ந்துள்ளதையும் அவதானிக்கமுடிகிறது.

இலங்கை அரசாங்கத்துடனோ, அன்றிச் சிங்கள தேசத்துடனோ பேச்சுவார்த்தைகளை நடாத்தி, தமிழர்களுடைய பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணலாம் என்ற நம்பிக்கைகளை, பெருமளவுக்குக் குறைப்பனவாகவே இந்நிகழ்வுகள் அமைந்துள்ளதையும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

முன்னாள் பிரதம மந்திரி பண்டாரநாயக்கவுடன், அன்றைய தமிழ்த் தலைவர் தந்தை செல்வநாயகம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்தெறியும்படி செய்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கண்டி யாத்திரையை நினைவூட்டும் விதமாகத் தற்போது ஜே.வி.பி பல போராட்டங்களை நடாத்தி வருகிறது.

கடந்தமாத இறுதியில், காலியிலிருந்து கொழும்புக்கு அது நடத்திய பாதயாத்திரையையடுத்து, தற்போது கண்டியிலிருந்து ஒரு மாபெரும் பாதயாத்திரையை நடாத்தவும் அது திட்டமிட்டுள்ளது.

ஜே.வி.பி. தவிரவும், நாட்டைக் காக்கும் பிக்குகள் முன்னணி என்ற பெயரிலும், மற்றும் பௌத்த மகாசங்கத்தின் பிரிவுகள் சிலவும், தற்போதைய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக தொடர்ச்சியான பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

தற்போதைய இந்தப் போராட்டங்கள் யாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது, ரணில் அரசாங்கம்- விடுதலைப் புலிகளுக்கு அதிகளவு விட்டுக்கொடுக்கிறார் என்பதே. குறிப்பாக, தமிழர்களுக்கு வழங்கப்படலாம்(?) என்று எதிர்பார்க்கப்படுகின்ற இடைக்கால நிர்வாகசபை குறித்து, இவர்கள் மிகக்கடுமையான நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக அரசாங்கம் சமர்ப்பித்த இரண்டு யோசனைகளை நிராகரித்திருந்த விடுதலைப் புலிகள், அரசாங்கம் இறுதியாகச் சமர்ப்பித்த மூன்றாவது யோசனை தொடர்பாகத் தமது மாறறு யோசனைகளை இப்போதுதான் சமர்ப்பிக்கத் தயாராகி வருகிறார்கள்.

அரசின் இந்த யோசனையும்கூட, தமிழ் மக்களது அபிலாசைகளைத் தீர்ப்பதாக அமைந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ள புலிகள்- ஆனாலும் இது தொடர்பில் தாம் தமது மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த மாற்று யோசனைகளில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்பது இன்னமும் உறுதிசெய்யப்படவில்லை.

அப்படியிருந்தபோதிலும், இந்த இடைக்கால நிர்வாகசபை - புலிகளுக்குத் தமிழீழத்தையே வழங்கிவிடப் போவதாகத் தெரிவித்து, சிங்களக்கடும் போக்குவாதிகள் எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தி வருகிறார்கள்.

இந்தப் போராட்டங்கள், சிங்களக் கடும்போக்கு இனவாத மனோபாவத்தில் இன்னமும் மாற்றம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்பதையே தெளிவாக உணர்த்துவதாகவுள்ளன.

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத அடக்குமுறையை ஆரம்பித்து வைத்த தனிச்சிங்களச் சட்டம்- தரப்படுத்தல், இனக்கலவரங்கள் என்பறறை அடுத்து, அதற்குத் தீர்வு காணக் காலத்துக்குக் காலம் தமிழ்த் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் பலவும்கூட இவ்வாறு தோல்வியிலேயே முடிந்தமை வரலாறு.

தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம், அந்த முயற்சிகளில் ஈடுபடும் இலங்கையின் அவ்வப்போதைய அரசாங்கங்களுக்கு எதிராக, அந்தவேளைகளில் எதிர்க் கட்சிகள்ாக இருப்போர் செயது வந்த போராட்டங்களே, தீர்வு முயற்சிகளைத் தோல்வியுறச் செய்துவந்தன.

அடிப்படையில் இலங்கையின் எந்தவொரு கட்சி அரசாங்கமும், தமிழர்களுடைய பிரச்சினை தொடர்பாக, ஒரு திட்டவட்டமான, புரிந்துணர்வுடன்கூடிய கொள்கையைக் கொண்டிராதபோதிலும், சில நெருக்கடிகள் காரணமாக அவை தீர்வுக்கு முயற்சிக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றன. அததகைய சந்தர்ப்பங்களிலும் அவை கட்சி அரசியல் போட்டிகளுள் சிக்குண்டு, சீர்குலைந்து போய்விடுகின்றன.

தற்போது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தீர்வு முயற்சிகளும் இத்தகைய ஒரு பாரிய இராணுவ, பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஒரு தீர்வு முயற்சியே என்பது யாவரும் அறிந்த உண்மை.

இந்த நெருக்கடிகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றவும், தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வாகத் தனிநாடு ஒன்று அமைக்கப்பட்டு விடுவதைத் தடுப்பதற்காகவும்? வேறு வழியின்றி ரணில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் இந்தச் சமாதான முயற்சிகளும்கூட, சிங்களக் கடும்போக்குப் பேரினவாதிகளுக்குச் சகிக்க முடியாதவையாக இருப்பது விந்தையானது.

ஆக, இப்போது அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள், சிங்களக் கடும் போக்கு இனவாதிகள் மனதில் மாற்றமெதனையும் பெரியளவில் ஏற்படுத்திவிடவில்லை என்பது வெளிப்படை.

தவிரவும், கட்சி அரசியல் போட்டிகளுக்கு அப்பால், இந்தப் பிரச்சினையை அணுகும் ஒரு மனோபாவமும், முதிர்ச்சியும் சிங்கள அரசியலாளர்களிடையே ஏற்பட்டுவிடவில்லை என்பதும் தெளிவாகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், அவரது ஆளும் கட்சியையும் பொறுத்தவரையில், 2001 தேர்தலில் அவர்களுடைய வெற்றியைத் தீர்மானித்தது என்பதற்கும், தொடர்ந்தும் இந்த ஆட்சியைத் தக்கவைக்கும் ஒரு தந்திரோபாயம் என்பதற்கும் அப்பால், இந்தச் சமாதான முயற்சி அதிகதூரம் நகர்ந்துள்ளதாக நாம் கருதிவிடமுடியாது.



ரணில் அரசு தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டுமானால், நாட்டில் மீண்டும் போர் மூண்டுவிடக் கூடாது. அத்தோடு, பொருளாதார வளர்ச்சியொன்றையும் இலங்கை எட்டவேண்டும்.

இந்த இரண்டும்தான் தற்போது ரணில் அரசின் பிரதான இலக்குகளாக இருக்கின்றன. இவைதவிர, மிச்சமாக இருக்கும் மற்றுமொரு இலக்கு - தனித்து பிரதமர் ரணிலினுடைய ஒரு இலக்கு. அது அவர் நாட்டின் ஜனாதிபதி ஆகவேண்டும் என்பது.

இந்த இறுதி இலக்கு எட்டப்பட வேண்டுமானால், தற்போதிருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு - மீதமாயிருக்கும் இன்னும் சுமார் இரண்டு வருட பதவிக்காலத்திலும், தமது பிரதமர் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டியது ரணிலுக்கு அவசியமாகிறது.

அவ்வாறு தக்கவைத்து, அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றிபெறறுவிட்டால், மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியும், அதன் தற்போதைய கதாநாயகன் ரணில் விக்கிரமசிங்கவும் சில ஆண்டுகளுக்கு உறுதியாக ஆட்சியில் இருக்கமுடியும்.

ரணில் அரசுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் இருக்கும் இந்த இலக்குகளை அடிப்படையாக வைத்தே அவரும், அவரது சகாக்களும் அரசியல் காய் நகர்த்தல்களைச் செய்து வருகிறார்கள். அதனால்தான், மிக முக்கியமான சமாதான முயற்சியில், உளப்பூர்வமாக ஈடுபடுவதாகக் கூறிக கொள்ளும் அவர்கள், மீண்டும் தலைவிரித்தாடும் தமிழர்களுக்கெதிரான இனவாதப் போக்கைக் கண்டிக்காமல், இன்னமும் பொருளாதார வளர்சசி பற்றியும், நாட்டில் மோதல் நடக்காதது பற்றியுமே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**அதியமான்**

# இந்த தமிழினம் அடங்காது

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்' - என்று அறைகூவி, தன மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த தியாகச் செம்மல் மாவீரன் திலீபனின் பதினாறாவது ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்படும் இவ்வேளையில், நெக்குருகி நினைவஞ்சலி செலுத்தி, அவனது வரலாற்றை எண்ணிப்பார்க்க் வேண்டியது அவசியமானது.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதியில், ஓருயிர் தன்னைத்தானே சிலுவையில் அறைந்துகொண்டது. சாவைச் சந்திப்பதற்கு அந்த உயிர் தன்கையில் எடுத்த ஆயுதம் அகிம்சை. பல்லாயிரக்கணக்கான மக்கள் பரிதவித்துப் பார்த்திருக்க, தன் உடலையும், உயிரையும் துடிக்கத் துடிக்கத் தற்கொடையாக்கிய ஒரு மாவீரனின் தியாகம், எமது இனத்திற்கு ஊட்டிய விழிப்புணர்வை, அந்த விழிப்புணர்வின் தேவையை, நாம் இந்தவேளையில், இந்தக் காலகட்டத்தில் கருத்தில் கொள்வது பொருத்தமானது மட்டுமல்ல, அவசியமானதும்கூட.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா, தமிழீழத்தவரின் தேசியப் பிரச்சினையில் வெளிப்படையாக, நேரடியாகத் தலையிட்ட போது, எமது மக்கள் நெஞ்சங்களில், இந்தயா ஒரு நம்பிக்கைக்குரியதாகவே தோன்றியது. அகிம்சையின் அடிப்படையிலேயே இந்தியா தனது அரசியல் கட்டமைப்பை 'உருவாக்கியுள்ளது' என்ற பிரமையை, அல்லது மாயையை இந்திய ஆட்சி பீடங்கள் தோற்றுவித்திருந்தன. உயர்வான கொள்கைகளும், நீதிகளும் உண்மையாகவே பேணப்படுகின்றன என்று இந்தியப் பொதுமக்கள் மட்டுமல்ல, தமிழீழப் பொதுமக்களும் மனமார நம்பினார்கள். அகிம்சைக் கோட்பாட்டின்மூலம், நீதியை வென்றெடுக்கலாம், நியாயத்தை நிலைநாட்டலாம் என்று, நம்மவர்களும் நம்பியிருந்த காலம் அது.

'சிங்கள அரசுகளுக்கு எதிராக அகிம்சைப் போராட்டங்களை நடத்தி, எமது உரிமைகளை வென்றெடுப்போம்' என்று - இன்று - யாராவது கருத்து வெளியிட்டால், அது நகைப்புக்கு இடமாகும் என்பதில் சந்தேகமில்லை. அதனை வரலாறு காட்டிநிற்கின்றது. அதனை நமது மக்களும் பட்டறிவினால் உணர்ந்துள்ளார்கள். 'சிறிலங்கா அரசாங்கத்திறகு எதிராக நடாத்தப்படும், அகிம்சைப் போராட்டம் வெற்றி பெறாது' என்பதை, அகிம்சைத் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டுள்ள எம்மவர்களும் ஒப்புக்கொள்வார்கள்.

ஆனால், அகிம்சைப் போராட்ட விடயத்தில் இந்தியா மீது எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையோ வித்தியாசமானது.



# தன் இலட்சியம்வரை போராடும்

'அகிம்சைப் போராட்டங்களை, சாத்வீகப் போராட்டங்களை, உண்ணாவிரதப் போராட்டங்களை - இந்தியா மதிக்கும். ஏனென்றால், இந்தியாவின் அடிப்படைத்தத்துவமே அகிம்சைக் கோட்பாடுதான். ஆகவே, சிங்கள இனவெறி அரசுகள் எமது அகிம்சைப் போராட்டங்களை அலட்சியம் செய்து, வன்முறையால் அடக்கியது போல், இந்தியா செய்யாது. அது எமது அகிம்சைப் போராட்டங்களைச் செவிமடுக்கும்! போராட்ட நியாயங்களுக்குத் தலைவணங்கும்!' என்று எமது தமிழினம் நம்பியது. அந்த நம்பிக்கையில், தனது எதிர்காலத்தைப் பணயம் வைக்கவும், எமது தமிழினம் தயாராக நின்றிருந்தவேளை, அந்த 1987 ஆம் ஆண்டு காலப்பகுதி.

அந்தவேளையில்தான், எமது இனத்தின் விடுதலைக்கான பாதை - எந்தத் திசைநோககி, எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் காட்டுவதற்காகத் தனியொருவனாக ஒரு புலி வீரன் புறப்பட்டான். அதற்காக அவன் அன்று ஏந்திய ஆயுதம் - இந்தியாவின் அதே அகிம்சை ஆயுதம்.

திலீபன் சொன்னான் - இந்த இனம், இந்தத் தமிழினம் அடங்காது. அது போராடும். ஆயுதம் இல்லா விட்டாலும் அது போராடும். புல்லையும் எடுத்து அது போராடும். அடக்குமுறைக்கு அது வளைந்து கொடுக்காது. பேரம்பேசாது, விட்டுக் கொடுக்காது. ஆயுதம் இல்லாவிட்டாலும், உணவு இல்லாவிட்டாலும் இந்த இனம் தலை வணங்காது. அது தொடர்ந்து போராடும். தன்னுடைய விடுதலைக்காக நியாயத்திற்காக, நீதிக்காக அது எந்த சக்தியையும் எதிர்த்துப் போராடும்.

திலீபன் போராடினான். சாவைச் சந்தித்தான். ஒரு புதிய விழிப்புணர்வை அவன் எமக்கு ஊட்டினான். போராட்டதிற்குப் பசித்தது - அவனே உணவானான். 'தமிழீழ இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவேண்டும். தமிழீழப் பிரதேசத்தில், சிறிலங்கா அரசு-பொலிஸ் நிலையங்களை அமைத்தல் நிறுத்தப்படவேண்டும். புனர்வாழ்வு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும். சிறையில் வாடுகின்ற 'தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும். ஊர்காவல் படையினரிடமுள்ள ஆயுதங்கள் பறிக்கப்படுவதுடன், தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகள் ஆகிய் வற்றிலுள்ள இராணுவ முகாம்கள் மூடப்படவேண்டும்' என்ற கோரிக்கைகளை முன்வைத்தே, திலீபன் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போர்ாட்டத்தை ஆரம்பித்தான். இந்தியாவிடம் நீதிகேட்டு அவன் தன் அகிம்சைப் போராட்டத்தைத் தொடங்கினான்.

எடுத்த காரியத்திற்காக இறுதி மூச்சு உள்ளவரை, உறுதியோடு போராடுகின்ற, உளவலிமையுள்ளவன்.

இலட்சிய உறுதிதான் தியாகி திலீபனிடமும் படிந்திருந்தது. 'ஒரு சொட்டு நீரும் அருந்தாமல், தனது உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போகின்றேன்' என்று திலீபன் அறிவித்தபோது, தலைவர் பிரபாகரன் அவனிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார். 'தண்ணீரையாவது குடித்து, உண்ணாவிரதத்தைத் தொடரலாம்' என்று தலைவர் பிரபாகரன்- திலீபனைக் கேட்டுக்கொண்டார்.

அதற்குத் திலீபன், தலைவரிடம் ஒரு பதில் கேள்வி கேட்டான். 'அண்ணா, நீங்கள் அன்று இந்தியாவில் உண்ணாவிரதம் இருந்த போது, அப்படிச் செய்யவில்லையே? நீங்களும ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் தானே, சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டீர்கள். என்னை மட்டும் ஏன் தண்ணீர் அருந்தச் சொல்கின்றீர்கள்?' என்றான்.

உயர்ந்தவர்களிடம் மட்டுமே காணக்கூடிய இலட்சிய உறுதி அது.

தியாகி திலீபனின் மரணமும் வித்தியாசமான ஒன்றுதான். அவனுடைய உறுதியான இலட்சியத்தை தமிழ்மக்கள அனைவருமே உணர்ந்திருந்தாகள். இந்திய அரசு - திலீபனின் கோரிக்கைகளுக்கு இணங்காத பட்சத்தில், திலீபன் கட்டாயம் சாவைத் தழுவிக்கொள்வான் என்று எல்லோருக்குமே தெரிந்திருந்தது. அதனால்தான், அவன் உண்ணாவிரதமிருந்தபோதே, அவன் மீது இரங்கற்பா பாடப்பட்டது.

**'திலீபன் அழைப்பது சாவையா -**
**இந்தச் சின்ன வயதில் அது தேவையா**
**திலீபனின் உயிரை அளிப்பாரா - அவன்**
**செத்தபின் மாற்றார் பிழைப்பாரா'**
**என்று குமுறினார் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள்.**

**'தாலாட்டுப் பாட்டில் தமிழ் தந்த தாய்க்குலமே**
**போராட்ட வீரன் போய்முடியப் போகின்றான்-**
**போய் முடியப் போகின்றான்...**
**போய் முடியப் போகின்றான்..**
**என்று புதுவை இரத்தினதுரை அவர்களும் கதறிப்பாடியதை, கால வெள்ளம் அழித்திடுமா என்ன?**

**சபேசன்**

# மாலைதீவில் ஏற்பட்ட கலவரங்களுக்கு அரசியல் அடக்குமுறைகளே காரணம்!

## சர்வதேச மன்னிப்புச்சபை குற்றச்சாட்டு



கடந்த வாரம் மாலைதீவில் நடைபெற்ற கலவரங்களுக்கு- அரசியல் அடக்குமுறைகளும், சிறைக்கைதிகள் மூவர் கொல்லப்பட்டதுமே காரணம் என, சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில், 64 வயதுடைய ஜனாதிபதி அப்துல் கயீம் - 6 ஆவது தடவையும் போட்டியிடப் போவதாக, தேர்தல் ஆணையாளர் அறிவித்த மறுநாள் கலவரங்கள் ஆரம்பித்தன.

சிறைச்சாலைகளில் இடம்பெறும் சித்திரவதைகள், அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சமான முறையில் நடத்தப்படும் வழக்குகள் காரணமாக - மக்களிடையே அமைதியின்மையைத் தோற்றுவித்து, கலவரமாக மாறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலவரங்கள் தொடர்பாக, இதுவரை 100 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே - சிறைச்சாலையில் கொல்லப்பட்ட மூவரில் இருவர், மாலைதீவில் மரணமடைந்ததாகவும், மூன்றாவது கைதி சிகிச்சைக்காக இலங்கைக்கு அனுப்பட்ட பின் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவின் சிறைச்சாலைகளில் சித்திரவதைகள் எவ்வாறு நடத்தப்படுகிறது என்பதை - கடந்த ஆண்டு மூன்று மாதங்களாக மாலைதீவின் சிறையிலிருந்த இலங்கையர் குறிப்பிடும் போது, தலைகீழாக தொங்கவிடுதல், தலைப் பாகத்தை நீரினுள் அமிழ்த்தல், கைதிகள் நித்திரை கொள்ளமுடியாத அளவுக்கு அறைகளை வெளிச்சம் மூட்டல் போன்ற செயற்பாடுகளைச் செய்வதாக குறிப்பிட்டார்.

# சவூதி வைத்தியசாலைக்கு வெளியே அல்கொய்டா – பொலிஸார் மோதல்!

## நான்கு பேர் மரணம்

சவூதி அரேபியாவின் ஜிசான் நகரிலுள்ள வைத்தியசாலை ஒன்றின் வெளிப்புறத்தில் - அல்-கொய்டா தீவிரவாதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற தாக்குதலில் - மூன்று துப்பாக்கிதாரிகளும், பொலிஸார் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

அல்-கொய்டா தீவிரவாதிகள் இயந்திரத் துப்பாக்கிகள், கிரனேட்டு ஆகிய ஆயுதங்கள் சகிதம், சிலரைப் பணயக்கைதிகளாகப் பிடிக்க எத்தனித்தவேளை- சவூதி பொலிஸார் அவர்களை சரணடையுமாறு கேட்டுக்கொண்டனர்.

ஆனால், அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால், இருபகுதியினருக்குமிடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

இந்த தாக்குதலில் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், இருவர் சரணடைந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சரணடைந்தவர்களில் ஒருவர், அமெரிக்க குற்றப் புலனாய்வுத் துறையால் தேடப்பட்ட 29 வயதான யுபிரான் அல்குரானி எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம், சவூதியின் தலைநகரில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு காரணமாக இருந்த 19 சந்தேகநபர்களில் அல்குரானியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அல்கொய்டா தீவிரவாதிகள் உள்ள

# கியூபா சிறைச்சாலை தொடர்பாக சிரியாவிற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது



'அல்கொய்டா தீவிரவாதிகள் சிறைவைக்கப்பட்டுள்ள கியூபாவில் அமைந்துள்ள குனான்ரனமோ தீவில் உள்ள முகாமில் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றிய வான்படையைச் சேர்ந்த 'அகமட் அல் கலிபா' அம்முகாம் தொடர்பான தகவல் வெளியே தெரிவிக்காமையால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். சில முக்கிய முகாம் தகவல்களை சிரியாவிற்கு தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே முகாமில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட யோமஷ் லீ அங்கு தடுத்துவைக்கப்பட்ட, அல்கொய்டா தீவிரவாதிகளின் ஆன்மீக தலைவராக கடமைபுரிந்த அமெரிக்க முஸ்லிம் படையிலிருந்த இவர் - அங்கு சிறைவைக்கப்பட்டுள்ள அல்கொய்டா தீவரவாதிகளின் ஒவ்வொருவரினதும், சிறைவைக்கப்பட்ட இடத்தின் வரைபடத்தை கடத்தியிருந்தார் என்ற குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை ஜேர்மன் அதிபர் சந்திப்பார்!



ஈராக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உலகநாடுகள் உதவ வேண்டுமென, அமெரிக்க அதிபர் கடந்த செவ்வாய்க்கிழமை ஐ.நா சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கின் மீதான ஆக்கிரமிப்பை எதிர்த்துவந்த ரஷ்யா, தனது ஆதரவை அமெரிக்காவிற்கு தெரிவிக்க முன்வந்துள்ளது. ஆனால் - பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளின் அதிபர்கள் - ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததை கண்டித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியின்றி ஈராக்கின் மீது போர்தொடுத்தமை, அவ்வமைப்பில் உள்ள பல அங்கத்துவ நாடுகளை அதிருப்திக்குள்ளாகியிருப்பதாக பிரான்ஸ் அதிபர் தெரிவித்துள்ளார்.

ஆனால் புஷ்ஷுடனான சந்திப்பின் பின் பிரான்ஸ் அதிபர் ஈராக் மீதான அமெரிக்காவின் சில கருத்துக்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

# நேபாளத்தில் குற்றச்செயலில் ஈடுபட்ட 4 படைவீரர்களுக்கு சிறைத்தண்டனை!

நேபாளத்தில் பயமுறுத்தல், ஆட்கடத்தல் தொடர்பாக நான்கு படைவீரர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளது.

சென்றமாதம் 40 படை உயரதிகாரிகள், போலியான கல்விப் பத்திரங்களை சமர்ப்பித்து, பதவி உயர்வு பெற முயன்றுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை - நேபாள படையினரிடையே மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதாக சர்வதேச மனிதஉரிமைகள் சபை தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் 7 மாதங்களாகத் தொடர்ந்த சமாதான பேச்சு வார்த்தைகள் முறிவடைந்தபின் மீண்டும் மோதல்கள் ஆரம்பித்துள்ளன. அண்மையில் மவோயிட் தீவிரவாதிகள் எனக்கருதப்பட்ட 12 பேர் டொரம்பா என்ற கிராமத்தில் தடுத்து வைக்கப்பட்ட பின் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



## ஊர்சுற்றி எழுதுவது

கிழக்கு மாகாணத்தில் அம்பாறையிலுள்ள தமிழ்க்கிராமம் ஒன்றில்... ஒரு கல்லில் சில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கிறதாம்.

இது 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். இதைப் பரிசீலித்துப் பார்பதற்கு வண மெத்தானந்த தேரர் என்பவர் சில மாதங்களுக்கு முன் அங்கு செல்லமுயன்றபோது, விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தித் திருப்பி அனுப்ப விட்டாராம்.

இதன் பின் கடந்த வாரம் சிஹல உறுமயத் தொண்டர்களின் பாதுகாப்புடன் அந்தப் பிக்கு அங்கு சென்றபோது, புலிகள் தடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டு நின்றனராம்.

எங்கள் மண்ணில் நாங்கள் செல்வதற்கு யார் தடுப்பது என்று கேட்டு, அந்த மெத்தானந்த தேரர் அந்தக்கல்லை ஆராய்ந்தாராம்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கல்லுடன் தேரரையும் சேர்த்துப் படம் எடுத்து வெளியிட்டிருப்பதுடன், இந்தச் செய்தியையும் வெளியிட்டிருக்கிறது. சிஹல உறுமய உறுப்பினர்களும் இப்படத்தில் உள்ளனர்.

இந்தக் கல்லும், அது இருக்கும் இடமும், அப்பிரதேசமும், சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்த பிரதேசமென்றும் - இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே கிழக்கு மாகாணம் சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானதாக இருந்ததென்று இவர்கள் வாதிடப்போகிறார்கள். சிங்களவர் மத்தியில் பிரசாரம்செய்து மேலும் இப்பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை அரசாங்கத்தின் அல்லது அரசாங்க அதிகாரிகளுடன் நிறைவேற்றப் போகிறார்கள்.

எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க 1956 இல் சிங்களத்தை மட்டும் அரியணையில் ஏற்றிய போது, அவரது மொழி வெறியை நாட்டில் இன வெறியாகப் பரப்புவதற்கு பிக்குகள் பலர் முன் வந்தனர். மொழி வெறியையும், இனவெறியையும பரவச் செய்தவதற்கு சாமரம் வீசிய பிக்குகளில் தல்பவில சீலவன்சதேரோவும், பத்தேகம விமல வன்ச தேரோவும் முன்னின்றனர்.

இலங்கையில் புதைபொருளாராய்ச்சி செய்வதாயிருந்தால், அந்த இடங்களில் சிங்களவர்களின் தொன்மை பற்றிய தகவல்கள் வெளிவரவேண்டும்.

தமிழர்களின் பழைய வரலாற்றுக்குச் சான்றுகள் கிடைக்கக்கூடிய இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி நடத்தப்படுவதில்லை.

சேருவல, திகவாடி ஆகிய இடங்கள் கிழக்கு மாகாணத்தில் தொன்மைவாய்ந்த புனித புத்த தலங்கள் என்று கண்டுபிடித்து விகாரைகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

கந்தரோடையில் பழைய விகாரைகளின் அடித்தளங்கள் புதிதாக மேல் மட்டம் கட்டிப் பாதுகாக்கப்படுகின்றன.

புத்த மதத்தவர் என்றால் அவர்கள் சிங்களவராகத்தானிருக்கவேண்டும் என்பது, இலங்கையில் வரலாறு படித்த சிங்களவர்கள் வெளிப்படுத்தும் கருத்து. 1881 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டில் கிழக்கு மாகாணத்தில், சிங்களவர்கள் வாழந்ததாக விபரம் இல்லை. எப்படி இங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்கள்.

வரலாற்றாய்வாளர்கள் உள்ளபடி ஆராய்ந்தால் உண்மைவரும். உண்மையை ஆராய்ந்து இங்கு சொல்ல முடியுமா?

இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல வடக்கு மாகாணத்திலும்கூட, இராணுவ முகாம் அமைந்துள்ள இடங்களில் அரச மரங்களின் கீழ். புத்தகோயில்கள் சிறிதாகத் தொடங்கி விரிவடைந்து வருகின்றன. இது இராணுவமுகாம்களில் மட்டுமல்ல கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் அரச மரத்தின் கீழ் ஒரு சிறிய புத்தர்சிலை திடீரெனத் தோன்றும். பின்னர் நாளடைவில் அரசமரம் போல் அந்த இடத்தில் விகாரையும் வளர்ந்து பரவி பான்சாலையும் அமைந்துவிடும்.

இன்னும் சில வருடங்களின் பின் இப்பொழுது உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்கும் இடங்களில் - ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கல்வெட்டுக்களும், புத்தவிகாரைகளின் அடித் தளங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக எலமெத் தானந்ததேரோ போல வேறொரு தேரோ கண்டுபிடித்து வெளியிடத் தயாராக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புத்தம் சரணம் கச்சாமி!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி



சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் உள்ளூர் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுக்கு, ஆலோசனைகள் மற்றும் உதவிகளை வழங்குவதற்கென - சர்வதேச அமைதிப்படைப் பிரதிநிதிகள் இந்த வாரத்தில் கொழும்பு வரவுள்ளனர் என்று, பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

அமைதிப்படையா? மீண்டுமா? என்று அதிர்ச்சியுடன் வாய்பிளந்து நின்றார் வாத்தியார்.

பயப்படாதீர்கள் இது வன்செயலற்ற அமைதிப்படையைச் சேர்ந்தவர்களா... என்றேன் நான்.

'அப்படியென்றால் வன்செயல் செய்யும் அமைதிப்படையென்றும் ஏதாவது உண்டா?' என்றார் வாத்தியார்.

'இதை மீண்டும் விளக்க வேண்டுமாக்கும்... என்றேன் நான்.

'ஐயையோ' அந்த பயங்கர அனுபவங்களை ஏன் கிளறுகிறீர்? என்றார் வாத்தியார்.

எனினும் வன்செயலுள்ள அமைதிப்படை, வன்செயலற்ற அமைதிப்படை என்று இப்படியெல்லாம் பெயருண்டா என்று கேள்வி என்னுள் எழவே செய்தது...

"என்னவோ எல்லாம் 'இறை'வன்செயல் செயல்தான்"

(இ)

-தெருவாசி

# ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது!

(கொழும்பு)

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவ குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதலையடுத்து, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டதாக, பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்பேரவையைச் சேர்ந்தோரால், துணைவேந்தரும், 13 மாணவர்களும் மற்றும் செய்தி சேகரிப்புக்குச் சென்ற ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையைச் சேர்ந்தோர், இந்தச் செயலில் ஈடுபட்டனர் என்றும், தேசிய பிக்குமார் முன்னணியைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் சிலர் இதில் சம்பநதப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயப்பட்ட சுயாதீன தொலைக்காட்சிச் சேவையைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் நான்கு பேர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## காணி விவகாரங்கள் தொடர்பாக புலிகள்-முஸ்லிம் தரப்பு சந்திப்பு!

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிகளுக்குமிடையே - காணி விடயங்கள் தொடர்பான சந்திப்பொன்று, நேற்று நடைபெற்றது.

அம்பாறை - ஆலையடிவேம்பு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் தரப்பில்-மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், மட்டு-அம்பாறை அரசியற் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் ஜனார்த்தனன் ஆகியோரும், முஸ்லிம் தரப்பில் எம். ஐ.எம்.மொகைதீன் தலைமையிலான குழுவினரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே, இருதரப்பினரும் எடுத்த முடிவுகளின்படி முஸ்லிம்கள் தமது வயல்நிலங்களில் பெரும்போக நெற்செய்கையினை மேற்கொள்வதெனவும், எதிர்வரும் 2 ஆம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சில முஸ்லிம் மக்களின் வயல்நிலங்களை இரு தரப்பினரும் சென்று பார்த்து, சிலவயல் நிலங்களை நெற்செய்கைக்கு அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (07)

### திலீபனின்...

வழமையைவிட, இந்த முறை நெடுந்தீவில் தியாகி திலீபனின் நினைவுதின நிகழ்வுகள் - வெகு விமரிசையாக நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனாலேயே, விரக்தியடைந்த பொலிஸாரும், அவர்களோடு இணைந்த சிலரும் எடுத்த முயற்சியே, இந்த புலிக் கொடி ஏற்றுதல் தொடர்பான தடை எனவும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

### அதிகாரமுள்ள...

கிளர்ந்தெழுந்து இங்கு அணி திரண்டுள்ளோம். நாம் இந்த உலகுக்கு ஒரு செய்தியைப் பிரகடனப்படுத்துகின்றோம்.

இனியும் எம்மால் இழுபடமுடியாது. எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போகவேண்டும். இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் செல்லுங்கள்.

நமது இயல்பு வாழ்க்கையை நாம் கட்டியெழுப்ப வசதியாக போதிய அதிகாரபலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று வேண்டும். நிலம்,நிதி, காவல்துறை,நீதி போன்ற அதிகாரங்கள் முறையாக உள்ளடக்கப்பட்ட இடைக்கால அரசை, எங்களது ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அரசு உடனடியாகக் கையளிக்க வேண்டும்.

நாம் சொல்லுகின்ற இத்தகைய அதிகாரங்களுக்குக் குறைவான எந்த ஒரு இடைக்காலக் கட்டமைப்பையும், தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

தமிழ்பேசும் மக்களாகிய எங்களது விருப்பமான இந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரித்து அரசுக்கு அதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும். வடக்கும் - கிழக்கும் தமிழ் பேசும் மக்களது பாரம்பரியத் தாயகம். இங்கிருந்து இராணுவம் வெளியேறவேண்டும்.

மக்கள் செயல்முனைப்புடன், சமாதான நடைமுறையில் பங்கு கொள்ளும் அச்சமற்ற சூழல் அப்போதுதான் தோன்றமுடியும். அத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களது அபிலாஷைகளான - தனித் தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணப்படுவதன் ஊடாகவே, நிரந்தர சமாதானம் சாத்தியம் என்பதை நாம் பிரகடனம் செய்கின்றோம். உயர்ந்தவர்கள் நாமெல்லோரும், உலகத்தாய் வயிற்று மைந்தர், நசிந்து இனிக்கிடக்க மாட்டோம், நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐம்பதாயிரம் மக்கள்...

ணிகள் யாவும், வவுனியா நகர மண்டபத்தை அடைந்ததும் அங்கு அரங்க செயற்பாடுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரினை மாவீரரின் தந்தையான ஜெகநாதன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை மாவீரரின் தந்தையான முத்துக்குமார் மணியம் ஏற்றினார். அடுத்து மூவினங்களைச் சேர்ந்த மதகுருமார்களும் சுடரேற்றினர். அதன்பின் பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினரால் அமைக்கப்பட்ட பொங்குதமிழ் நினைவாலயத்தை டொக்டர் ரி.முத்துலிங்கம் திறந்துவைத்தார்.

பொங்குதமிழ் பிரகடனத்தை ஏற்பாட்டுக்குழுவின் பொருளாளர் வி.எஸ்.தேவராசா திரைநீக்கம் செய்துவைத்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் எமது நிலம் எமக்கு வேண்டும், நாம் எமது வீடுகளுக்கு செல்ல இராணுவமே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரும், வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.தேவராசா, சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன், வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தலைவர் எஸ்.செக்ஸன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (03)





வவுனியா பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்ட பொது மக்களில் ஒருபகுதியினரை படங்களில் காணலாம்.

## அதிகாரப் பரவலாக்கலை...

கிழக்கில் பல முகாம்களை விடுதலைப் புலிகள் அமைந்துவருகின்றனர்.

புலிகளின் இந்த நடவடிக்கையால், திருகோணமலை துறைமுகத்துக்கு மட்டும் அச்சுறுத்தல் ஏற்படவில்லை. கடற்படைக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமைகளில் பிரதமர் தூரநோக்கற்று செயற்பட்டு வருகிறார்.

கிழக்கில் விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பை பலப்படுத்திவருவதாக முஸ்லிம் அரசியல் தலைவர்கள் எமக்குத் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் தம்மால் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை மீண்டும் அமுல்படுததுவதற்கு ஜனாதிபதி முடிவு செய்துள்ளார். இதனை அமுல்படுத்துவதிலுள்ள சிக்கல்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுடன் அவர் கலந்துரையாடி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

தினமும் கிளிநொச்சி சென்று பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆர்வமும், விருப்பும் உள்ளவர்கள் தேவை சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் அதற்குரிய ஆவணங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுடன் 29.09.2003 திங்களன்று காலை 10 மணிக்கு எமது அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்
(இ)
நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

## இறுதிவருட மாணவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழக , இறுதி வருட முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர்களின் சுயவிபரங்கள் தாங்கிய 'முகவரிகள்' நூலினை இன்று (25.09.2003) வியாழன் காலை 11.30 மணிக்கு மாணவர் பொது அறையில் வந்து பெற்றுச்செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

நூலாக்கக்குழு
இறுதிவருடம்
(98/BAD, 98/com)
(490)



## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும். (காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல. 711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 - 6080660, 021 - 2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(சீ-1594)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.